23 DEC 1978
MAD

ஸ்ரீ:ஸ்து

அம்ருதலஹரீ ஸிரீஸ் நெ. 2.

ஸ்ரீ காஞ்சீ. அண்ணாஸ்வாமியின் ஸ்ரீஸூக்திகளின்
அநுபவத்தையே நித்யகாலக்ஷேபமாகக்கொண்ட
மதுரை தமிழ்ப்பண்டிதர்

வித்வான் S. ஆழ்வார் ஐயங்கார்
எழுதிய

# பாத்ரதத்வ பரமார்த்தம்.

மதுரை ஸத்ஸம்ப்ரதாய ஸபையின் சார்பாக
வெளியிடப்பட்டது.

மதுரை, ஹரிஸமய திவாகரம் பிரஸ்ஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

15—10—1938.

Q22
N38
121206

ஸ்ரீ:

# முகவுரை.

மதுரை வேதாந்ததேசிகபக்த ஸபையினால் வெளியிடப்பட்ட பாத்ரதத்வநிர்ணயம் என்னும் மிகச் சிறியவொரு புத்தகத்தை அடியேன் ஸ்ரீகாஞ்சீ அண்ணாஸ்வாமிக்கு அனுப்பி "இதைப்பற்றி விமர்ஶித்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்திருந்தேன். உடனே அந்த ஸ்வாமி அடியேனுக்குப் பல பரமார்த்தங்களை உணர்த்தியருளிச் சில அற்புதமான ச்லோகங்களையும் எழுதியனுப்பினார். அந்த ச்லோகங்கள் ரஸிகர்களுக்கு மிகவும் மநோஹரங்களாயிருக்குமென்று அவற்றை ஈண்டுக் குறிப்பிடுகின்றேன். தேசிக பக்த ஸபை வெளியிட்ட (13 பக்கமுள்ள) அப்புத்தகத்தில், முடிவு என்ற தலைப்பின்கீழ் 1-முதல் 25-வரை லக்கமிட்டு ஸாரஸங்க்ரஹம் போல் காட்டப்பட்டுள்ள விஷயங்களுக்கு விடையளிப்பு இந்த ச்லோகங்களில் காணத்தகும். அதிலுள்ள லக்கங்களின் அடைவிலேயே இந்த ச்லோகமாலிகையிலும் லக்கங்கள் இடப்பட்டுள்ளன. அதையும் இதையும் சேர்த்து வாசிப்பவர்களுக்கு விஷயம் மிக எளிதாகப் புலப்படும். அப்புத்தகம் கிடைக்கப்பெறாதவர்களும் இந்த நூலைப் பூர்த்தியாக வாசித்துப் பரமார்த்த முணரலாம்.

## ஸ்ரீகாஞ்சீ. அண்ணாஸ்வாமியின் சுலோகங்கள்.

॥ பாத்ரதத்த்வப்ரகாஶகபத்யமாலிகா ॥

ஸநாதேயபாத்ரஸ்ய ப்ரத்யாக்யாநம் நஶோபதே ।
தயாபி ரஸிகஸ்வாந்தைஃ பதைஸ்தத்த்வம் நிவேத்யதே ॥

தத்த்வதே பஞ்சவிம்ஶத்யாக்ஷேபாநாம் விநிவேஶநைஃ ।
ஸந்தோ விவிதாநம்ஶாந் ஸ்ருத்யேஶைஃ ப்ரதிவீக்ஷதாம் ॥

1. விஹிதே தேஶிகேநைவ ஸூத்ரா நிஜா இதி விஜாநதாம் ।
ராஜாஜ்ஞாவஶ்ய ஜாவஸ்ய ஸ்தாபநம் பஹ்வநூஶோபநம் ॥

ഹരിതേഷ്വേവ വൃക്ഷേഷു പ്രകൃഷ്ടിവന്തീശിനാ ഇതി ।
ജാനന്തോ ഭവികാഃ പ്രാജ്ഞാസ്തജ്ജ്ഞാ ഹവിതം കടേഃ ॥

2. ശ്രീവേദാന്തഹരിശേഷാണാം ശാരീരഭാഷ്യം പ്രശസ്യതേ ।
ഇത്യുക്തിഃ കിംഫലം സമ്ഭവേത്? സ്വാത്മാ തത്ത്വതദാവതാ ॥

3. തേന്നാവായമുക്ത്യുക്തിഷ്വസ്തി ശാരീരഭാഷ്യപ്രശംസനം ।
ഇത്യേവമുക്ത്വാ ശക്തിവിശ്വംഭൂതാനാം ഭാരതഃ ഭവേ ॥

4. ബ്രഹ്മതന്ത്രസ്വതന്ത്രായമുശിഷ്യാശിഷ്യൈഃ ഭാഷ്യമോചരഃ ।
കാഥോ വിവിധിതോസ്തി ജയനം ശശശൃംഗതി ॥

5. ശംഭോർഭീതായമുകാമസ്യ നിയമാണവിലക്ഷണം ।
പ്രഭാണം ദൂശിമതം നാമഹ്രിതഃ, സ്വവാണീ വേദവാക്കിഭോ ॥

171206

6. ഗുരുന്ധഷ്ടസ്തത്തന്നിയന്ത്വദ്യാനാം വിധിവേശനം ।
നാത്യന്തവശ്യകഭിത്യുക്ത്വാ നകിംവിതഃ പ്രാഭ്യതേ ഫലം ॥

7. ശ്രീഭാഷ്യേജ്ഞവദ്യസ്യ പ്രാശസ്ത്യം സമുദീരിതം ।
ഇത്യുപവർഷാംശ്ച തസ്യൈവ യാഥാർത്ഥ്യാദ്ദിത്തകൃയാ ।

8. ഫലതീർവാദിഷു ഗ്രന്ഥേഷ്വഭ്യാദ്വ വിധിവേശിതം ।
ശ്രീഭാഷ്യവൃത്തിദീപം ദീഃ വക്തി തസ്യൈവ യോഗ്യതാം ॥

സമുദായവിപ്രശസ്തസ്യ തസ്യ ത്വക്ഷ്വാവരോധനം ।
കൃത്യേസ്യാദ്ഭവസംരംഭോ ഹേയജത്യേവ ബാധിതം ॥

9. ശ്രീദേശികവരസ്യൈഷു ശാരീരാർത്ഥാനുസംഹിതിഃ ।
ജയത്യേതി യദുക്തം തത് സ്വലക്ഷഗ്രന്ഥഭാവിതം ॥

10. ദിവ്യപ്രബന്ധവ്യാഖ്യായാം ഭാഷ്യവ്യാഖ്യാനുസംഹിതിഃ ।
ഇത്യുക്തിരപി സാരദ്യാ താഭ്രിജാഗവിഷയമുയാതഃ ॥

𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌬𑍍𑌦𑍇 𑌕𑍋𑌶𑍇 𑌸𑌮𑌵𑌸𑍍𑌥𑌯𑌾𑌯𑍁𑌷𑌿 ।
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌵𑌂𑌶𑌾𑌟𑌵𑍀𑌦𑍍𑌯𑍋𑌤𑌨𑌾𑌶𑌿𑌷𑍍𑌟𑌾 𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑍇 ॥

𑌦𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌰𑌗𑌤𑍇𑌷𑍁 𑌸𑍍𑌵𑌯𑌂𑌯𑌾𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑍇 𑌕𑍃𑌤𑍀𑌨𑌾𑌂 𑌪𑌠𑍇 ।
𑌪𑍍𑌰𑍀𑌤𑍇𑌽𑌕𑌾𑌰𑍍𑌷𑍀𑌤𑍍 𑌸𑌦𑍍𑌗𑍁𑌣𑌵𑌤𑍍𑌸𑌮𑌾𑌨𑍍𑌯𑌾𑌂 ॥

11. 𑌪𑌾𑌤𑍍𑌰𑌪𑌕𑍍𑌷𑌂 𑌸𑍍𑌵𑌵𑌶𑍀𑌕𑍃𑌤𑍍𑌯𑍋𑌵𑌾𑌚 𑌨𑍃𑌪𑌾𑌗𑍍𑌰𑌤𑌃 𑌶𑍁𑌭𑌂 ।
𑌤𑌾𑌮𑌕𑍋𑌶𑍇 𑌵𑍃𑌤𑍇𑌽𑌪𑍀𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌗𑍍𑌰𑌂 𑌦𑍀𑌪𑌪𑍂𑌜𑌯𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑍇 ॥

12. 𑌕𑍃𑌤𑌿𑌪𑍍𑌰𑌬𑌨𑍍𑌧𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑌾𑌵𑌸𑍍𑌸𑌪𑍂𑌰𑍍𑌯𑌾 𑌹𑌾𑌸𑌮𑍇𑌤𑌾𑌃 ।
𑌤𑌤𑍍𑌰 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑌪𑌕𑍍𑌷𑍇𑌣𑌾𑌂 𑌵𑌿𑌨𑍍𑌯𑌾𑌸𑍋𑌹𑍍𑌯𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑌿𑌕𑌃 ॥

13. 𑌕𑌟𑌾𑌬𑌮𑍍𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌪𑍂𑌜𑌨𑌕𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌪𑌸𑍍𑌤𑍋𑌹𑍋 ।
𑌕𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑌂 𑌪𑌾𑌠𑍋𑌽𑌪𑌿 𑌨𑍋𑌨𑌯𑍇𑌤 ॥

14. 𑌸𑌪𑍂𑌜𑍇𑌶𑍇𑌤𑌿𑌪𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑌤𑍂𑌰 நஞ்சீயரி𑌤𑍍𑌯𑌸𑍌 ।
𑌪𑌾𑌤𑍂𑌰 𑌸𑍍𑌵𑌮𑍋𑌹𑍋𑌽𑌪𑌿𑌮𑍋𑌹𑍋𑌽𑌪𑍍𑌯𑌜𑍀𑌕𑌤𑍂𑌂 𑌨𑌶𑍍𑌯𑌤𑍇 ॥

𑌕𑌾𑌲𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑌂𑌪𑍍𑌰𑌶𑍀𑌜𑍇 𑌪𑍍𑌰𑌾𑌗𑍍𑌰𑌂 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌤𑍍𑌯𑌪𑌿 ।
𑌪𑌰𑍇𑌶𑍂𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌪𑌿𑌤𑌂𑌹𑌾𑌤𑌿 𑌤𑌤𑍍𑌸𑍍𑌸𑍍𑌥𑍋𑌤𑍍𑌰 𑌵𑌿𑌮𑍍𑌬𑌵𑌃 ॥

15. 𑌪𑌾𑌨𑍍𑌚𑌾𑌤𑌿𑌪𑍍𑌰𑌬𑌨𑍍𑌧𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌸𑌂𑌜𑌨𑌕𑌾𑌸𑌿 𑌯𑌤 ।
𑌤𑌤𑍍𑌰𑌾𑌸𑍌 𑌦𑍇𑌵𑌕𑌃𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌶𑍍𑌶𑍍𑌰𑌾𑌵𑌣𑍀𑌯𑍋𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ॥

16. 𑌕𑌰𑍍𑌯𑍁𑌦𑍍𑌧𑌵𑌿𑌤𑌿𑌪𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌮𑍋𑌹𑍋𑌬𑌹𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌿𑌃 ।
𑌨𑌿𑌰𑍍𑌣𑌾𑌯𑌿 𑌤𑌤𑍍𑌸𑍍𑌯 𑌕𑌤𑍂𑌰 𑌯𑌃 𑌕𑍋𑌽𑌪𑌿𑌪𑌾𑌠𑌸𑍍𑌤𑍋𑌹𑍋 ॥

17. 𑌶𑌤𑍇𑌸𑌤𑍀𑌤𑌿 𑌤𑌤𑍍𑌦𑍇𑌦𑍍𑌯𑌯𑍍𑌯𑌾𑌹𑌾𑌰𑍇𑌸𑌤𑌿 𑌸𑌾𑌯𑌨𑍍𑌤𑌾 ।
𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌶𑍍𑌚 𑌤𑌾𑌸𑌾𑌯𑍁𑌵𑌿𑌪𑌶𑍀𑌤𑌾𑌯𑌪𑍂𑌰𑍍𑌵𑌹𑌨𑌾𑌤 ॥

நாலாயிரத்துநானூற்றுநாற்பத𑌦𑌾 𑌶𑌤𑌾𑌯𑌤𑌿 ।
நாற்பத்தோராவத𑌦𑍇𑌯 𑌬𑌹𑌨𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌃 𑌕𑌯𑌂 𑌹𑌵𑍇𑌤 ॥

18. अज्ञानां भावकजन्ति प्रस्तावेन विशिक्षणम् ।
दैनवोद्यत्तस्तस्य निरावो विहरोहिवः ॥

19. श्रीवर्णसंकोचायेन्दु वधूव्रुतयायोमृता ।
निरवद्यतिगीभन्नरस्या कान्तारव्येपवडेशनाद ॥

20. राधवात्रस्य नव्यत्वस्यावनं शतशःकृतम् ।
प्रतिज्ञातत्रतस्त्वस्य कयं वेदत्वति वज्ञनम् ॥

21. न्यायस्थानीयनिक्षेपाः प्रमाणान्तरसंमताः ।
तत्वमियन्नाराणे कायन्तस्वामहायुक्तिनिदृष्टकम् ॥

22. श्रीवर्णसंकोचायन्नादवीराडवेरोमनानः ।
तनयन्नारथेदं स्तुकवेन्निततृन्त्तैः पारेरंजनी ॥

23. केशवायन्यकापातानि निवस्यं वन्तनभितनम् ।
प्राप्यंधशन्दितं श्रीमनु प्रयस्यनिपृयापृया ॥

24. उपावात्रवडायेन्नयः प्रोत्स्वस्तन विमहिन्तः ।
इत्यदूषायन्स्वन्स्वप्रजुगस्वन्स्पूजानधिके ॥

25. तयावातेस्तणितेन तन पात्रततयपुजेन ।
प्रदयेमिनषीयेधिते इति सन्स्पन्पप्रदशीन्तम् ॥

---

कस्मापिनिन्द्रिन्कात्रूपष्ठान भान्यावासोहपि विवेकिनः ।
कस्यनधनिरिष्टं विजानन्नय नसन्भयवः ॥

“कल्याणगुणवासाय [illegible] ।
[illegible] ॥”

इति देशिकदिव्योक्तिर्नन्स्याय सन्ततम् ।
प्रसन्नार्थवित्परेषां दृष्ट्यन्तं स्वत्यत्वये ॥

विहायाभिनिवेशं ये वीक्षन्ते रसिकाः कृतीः ।
तेषामेतज्ज्ञसहाभिरवस्तन्ता प्रभा ॥

श्रीदेशिकादिगुरुभ्येष् पारम्पर्ययतां सिनः ।
सन्तानदेवेन्दे प्राज्ञा इति संश्रितम् ॥

तत्राह्यस्मिन्याया दोषान्व्याप्तिविहीनता ।
विषयाणां विशेषेष् बहुव्याप्तिसम्बन्धम् ॥

विश्वदेवविचारेप्राक् प्राप्ता विजयदक्षिणा ।
सहाभिरेव त्वद्भावत्रवैतत्र साक्षिणी ॥

सम्प्रियाद्रुक्षीणसंवृद्धविवेदिनाम् ।
व्याहाराद् विस्तरेणैव प्रत्याव्यातं नकारये ॥

---

ஆரியர்காள்! அண்ணுஸ்வாமி அருளிய இந்தச்லோகமாலி கையே பரமார்த்த முணர்த்தப் போதுமாயினும், வடமொழிபறியா தார்க்கு த்ருப்தி பெறுவிக்கவேண்டித் தமிழிலும் விரிவான விடை விஜ்ஞாபிக்கப்படுகிறது.

ப்ரதிபக்ஷ புஸ்தகத்தின் விஷயங்களுள் ஒன்றைப்பற்றி மிக முக்கியமாக இங்கு ஒன்று விஜ்ஞாபிக்கிறேன். — “ராமாநுஜதயா பாத்ரத்தனியனைப் பழையதெனக்காட்டி அடையும் பலன் ஒன்று மில்லையென்பது வ்யக்தம்” என்று அப்புத்தகத்தில் எழுதப் பட்டிருக்கிறது. இதைப் பழையதென்று காட்டிக்கொள்ளப் பதினுயிரம் ரூபாய்களுக்குமேல் செலவு செய்து ஸமீபகாலத்தில்

உத்ஸவம் நடத்தியிருக்கிறார்கள். ஸந்நிதி விவாதங்களிலும் "இது நூதனமாகக் கல்பிதம். நூதனமாகவே சொல்ல ஆரம்பிக்கப்படுகிறது" என்னும்போது, ஸ்ரீ சேலேசத் தனியனுக்கு மிக முன்னமே இது ஜனித்தது என்றும், நெடுநாளாகவே நாங்கள் இதைச்சொல்லி வருகிறோமென்றும் வாதிக்க விரும்புகிறார்கள்; இப்படியிருக்க, "இதைப் பழையதெனக் காட்டியடையும் பலன் ஒன்றுமில்லை" என்பதாக இப்போது வேதாந்ததேசிக பக்தசபை வெளியிடுகின்றவிது வியப்பே. புதியதனியனைப் பழையதெனக் காட்டிக்கொள்ள இவர்கள் விரும்பாமலேயிருந்திட்டால் இவ்வளவு விசாரங்களுக்கு உதயமேயிராதன்றோ. இனியாகிலும் இந்த தேசிக பக்தஸபையானது "இப்பாத்திரத் தனியனைப் பழையதெனக் காட்டிக்கொள்வது வீணாதலால் இத்தகைய முயற்சியில் யாரும் கை வைக்க வேண்டா" என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிப் பரவவிடுமாகில் உலகுக்கு மிக நன்மையேயாகும்.

முகவுரை முற்றிற்று.

ஸ்ரீ ரஸ்து.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# பாத்ரதத்வ பராமர்சம்.

ஶ்லோ: [illegible]
[illegible]
[illegible]
[illegible]

1. ராமாநுஜதயாபாத்ரத்தனியனும் அந்தச்சேர்ந்த வாழித்திருநாமங்களும் மிகவும் நூதனங்கள் என்பதையும் போட்டியாகக் கல்பிதங்கள் என்பதையும் ஸ்ரீகாஞ்சீ அண்ணாஸ்வாமியின் தத்வக்ரந்தமும் விஜயத்வஜக்ரந்தமும் மிக விரிவாகவும் ப்ராமாணிகமனோஹரமாகவும் நிரூபித்திருக்கின்றனவென்பது ஸகல ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டீ ப்ரஸித்தமே.

2. அந்த இரண்டு க்ரந்தங்களிலும் நிரூபிக்கப்பட்டிருக்கின்ற விஷயங்களின்மீது மறுப்புரைக்க அணுவளவும் ஆஸ்பதமில்லையென்பதை ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாய வித்வான்கள் யாவரும் இசைந்தேயிருக்கின்றார்கள். ஸமீபகாலத்தில் ராமாநுஜதயாபாத்ர மஹோத்ஸவமென்று ஒரு கொண்டாட்டம் நடத்திவைத்த மஹான்கள் அவ்வுத்ஸவத்தின் முடிவு தினத்தில் அந்தத்தனியனுடைய அவதாரணக்ரமாதி சரித்திரங்களையெல்லாம் விரிவாக நிரூபித்து அதற்கு வியாக்கியானமும் சேர்த்து ஒரு புத்தகம் வெளியிடப்போகிறதாக வேதாந்த தீபிகையிலும் சுதேசமித்திரனிலும் முன்னமேவிளம்பரம் செய்திருந்தது அனைவருமறிந்ததே. அதைப்பற்றி அண்ணாஸ்வாமி எழுதுகையில், "அத்தனியனுக்கு வியாக்கியானமெழுதுகிற முயற்சியிருக்கட்டும்; உலகமெல்லாம் உருகும்படியான வியாக்கியானத்தை நாமே யெழுதுவோம்; அதன் சரித்திரத்தை வெளியிடுவ

தாக விளம்பரம் செய்திருக்கிறார்களே; அது வெளிவரும் நாளையே ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்" என்று விஜயத்வஜத்தில் எழுதியிருந்தார். பிறர் ஏற்கனவே எழுதியிருக்கின்ற சரித்திரம் முழுவதும் அஸம்பாவிதமென்பதை அசைக்கமுடியாதபடி ப்ரமாண யுக்திகளுடன் அண்ணாஸ்வாமி நிரூபித்துவிட்டபடியால் அதற்கு எவ்விதத்திலும் மறுப்புரைக்க இடமில்லாமையாலும், புதிய சரித்திரம் கல்பிக்கவும் ஸாத்யமல்லாதபடியாலும் சரித்ரப்ரகாசந விஷயத்தில் மௌனமாக இருந்துவிடுவதே நலம் என்று துணிந்து அம் மஹான்கள் அந்த முயற்சியை அறவே யொழித்திட்டு ஏதோவொரு வியாக்கியானத்தைமட்டும் வெளியிட்டிருக்கின்றார்கள் என்பதும் ப்ரஸித்தம். இதுதான் பிராமாணிகமான வழி.

3. இத்தனியன் உத்ஸவம் தூப்புலில் நடந்தபோது பல திசைகளிலிருந்தும் பல வித்வான்கள் விஜயம் செய்திருந்தார்கள். இத்தனியன் விஷயமாக அண்ணாஸ்வாமி வெளியிட்டிருந்த இரண்டு க்ரந்தங்களுக்கும் மறுப்பாக உபந்யாஸங்கள் செய்யப்பட வேணுமென்றும் பதில் க்ரந்தமும் வெளியிடப்படவேணுமென்றும் அந்த வித்வான்கள் அனைவரும் உத்ஸவ நிர்வாஹகமஹநீயர்களால் மிகவும் ப்ரார்த்திக்கப்பட்டார்கள். ஒவ்வொருவரும் அவ்விரண்டு நூல்களையும் ஆராய்ந்து பார்த்து "நாஹம் நாஹம் ந வாஹம், ந வ [illegible]" என்றார்களே யல்லது வாய்திறக்கவும் விரும்பினாரில்லை. ஆனால், கடைசியாக ஒருவிதமான மறுப்பு வேதாந்த தீபிகைக்கு ஸாத்யமாக முடிந்தது. அதாவது, ஆவணி மாதத்து தீபிகையில் "ராமாநுஜ தயாபாத்ர மஹாமந்த்ரத்தின் சிறப்பு" என்ற வியாஸத்தின முடிவில் — "இந்த மஹாமந்த்ரத்தின் பேரில் சிலர் அஸூயையால் வெளியிடும் தூஷணங்களைக் காது கொடுக்காமல் தள்ளிவிட ப்ராப்தம்" என்றெழுதினதுதான்.

4. இப்படியிருக்க, மதுரை வேதாந்த தேசிக பக்த ஸபையாரால் வெளியிடப்பட்டதாக "பாத்ரதத்வ நிர்ணயம்" என்றொரு சிறு புத்தகம் நமது பார்வைக்கு வந்திருக்கின்றது. இதனை யெழுதியவர் இன்னாரென்று நாமநிர்த்தேசமில்லை. எழுதினவர்க்

காவது விஷயம் த்ருப்திகரமாக இருந்தால் தம் பெயரை வெளியிட்டுக்கொள்ள உத்ஸாஹம் பிறந்திருக்கும். பதில் புத்தகமென்று ஒன்று வெளியிட்டு வைப்போமென்று இவ்வளவே கருதித் தலைகாலில்லாதபடி யெழுதப்படுமதில் பெயரை வெளியிட்டுக்கொள்ள வெள்க வேண்டியது வாஸ்தவந்தானே.

5. ஏற்கனவே அண்ணாஸ்வாமியின் க்ரந்தங்களில் வெளியிட்டவைதவிர இன்னமும் சில பரமார்த்தங்களை வெளியிடுவதற்கு நல்ல அவகாசமளித்த பெருமை யொன்றுமாத்திரம் அப் புத்தகத்திற்கு உள்ளது. ஆகவே அதற்காக நாம் பெருநன்றிபாராட்டி இஃது எழுதுகின்றோம். முந்துறமுன்னம் ஒருமுக்கியமான விஷயம் தெரிவிக்கிறோம். எந்தச்சுவடிக்கு நாம் இப்போது பதில் எழுதுகிறோமோ அதற்குக் கர்த்தாவின் பெயர் இல்லையென்று தெரிவித்தோம். "வேதாந்த தேசிக பக்த ஸபை, மதுரை" என்றே முடிந்திருக்கிறது. ஆரம்பத்தில் பார்த்தாலோ "விச்வேதேவ விசாரத்தில் நாம் எழுதியிருந்தபடி நாளதுவரை இவர் ஜபதக்ஷிணையைப் பெற யாதொரு முயற்சியும் செய்யவில்லை" என்கிற வாசகம் காண்கிறது. சில வருஷங்களுக்குமுன் அண்ணாஸ்வாமிக்கும் சில பண்டிதர்களுக்கும் நடந்த விச்வேதேவ விசாரத்தில் ஸம்பந்தப்பட்ட வொருவர் அது எழுதியதாக விளங்குகிறது. அந்த விச்வேதேவ விசாரத்தில் கடைசியாக அண்ணாஸ்வாமியின் நிர்ணயமே வெற்றிபெற்றது என்பதை திருவாதியிலிருந்து வெளிவரும் உத்யாந பத்ரிகையினால் பண்டிதவுலகம் உணர்ந்தேயுள்ளது. அண்ணாஸ்வாமியின் ரக்ஷாவிலோசந பாவப்ரகாசிகா என்கிற க்ரந்தம் நாளைக்கும் விளங்காநின்றது. இவர் இப்போதுதான் துயிலெழுந்தார்போலும். அண்ணாஸ்வாமியின் நிர்ணயமே யுக்தமானது என்று திருவையாற்றுக் காலேஜ் பண்டிதர்கள் விரிவாக உத்யாந பத்ரிகையில் வெளியிட்டிருப்பதும் அதன்மேல் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி "தேசிக பக்தர்களே இப்படி வெளியிடலாமா" என்று பரிதபித்து ஒரு சிறு பத்ரிகை வெளியிட்டு ஓய்ந்ததும் ஒருவர்க்கும் மறந்திராதே. நினைப்பூட்டுவதும் நன்றே. இது நிற்க.

6. அண்ணாஸ்வாமியின் இரண்டு க்ரந்தங்களிலும் ராமாநுஜ பாத்ரவிஷயமாக விமர்சிக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான விஷயங்களுள் நாலைந்து விஷயங்களுக்கு ஏதோ பதில்சொல்லுவதாக அதில் முயற்சி காண்கிறது. பல பாகங்கள் முக்கியமல்லாமையாலே அவற்றுக்கு பதில் சொல்லாமல் விட்டுவிட்டதாக நிகமனம் செய்திருக்கிறது. முக்கியமான பாகங்களில் ஒன்றுக்குக்கூட பதில் அளிக்கவில்லை யென்பதையும், எழுதியிருக்கிறவரையிலுங்கூட ஒவ்வொன்றும் பொருந்தாத விஷயங்களே யென்பதையும் இதில் நிரூபிக்கிறோம். அப்புத்தகத்தில் காண்கிற பலவகை நிந்தனைகளில் நாம் கண் செலுத்தாமல் விஷயங்களைமாத்திரம் விமர்சிக்கிறோம்.

7. ராமாநுஜ தயாபாத்ரத் தனியன் நாளதுவரை எல்லா திருமாளிகைகளிலும், ஸ்வாதீனமான திவ்ய தேசங்களிலும் அநுஸந்திக்கப்பட்டு வருவதாக எழுதுகிறார். திவ்ய தேசங்களிலெங்கும் இத் தனியனைப் புகச்செய்யவேணுமென்று ப்ரபலப்ரயாஸங்கள் பட்டவர்கள் அது அஸாத்யமானவளவில், தங்களுக்கு வசப்பட்ட சில கோவில்களிலும் க்ருஹங்களிலுங்கூடவா இதைச் சொல்லிக் கொள்ளாமலிருப்பார்கள். இங்ஙனம் சொல்லிக் கொண்டு வருகிறார்களென்பதை யாரும் அபலபிக்கவில்லையே.

8. ஆஸேது ஹிமாசலம் இத்தனியனைப் பரிக்ரஹித்திருக்கிறார்களென்பதற்கு என்ன அர்த்தமோ தெரியவில்லை. ஆங்கில பாஷை உலகமெங்கும் பரிக்ரஹம் பெற்றிருக்கின்றது. அதனாலென்ன? இப்படிப்பட்ட வார்த்தைகள் இவ்விஷய விசாரத்திற்குச் சிறிதும் ஏலாதவை.

9. ப்ரம்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமியின் பரம்பரையான இரண்டாம் பட்டம் மூன்றாம் பட்டம் ஸ்வாமிகளால் இத்தனியன் வரலாறு விவரிக்கப்பட்டிருக்கிறதாக எழுதப்பட்டுளது. இது வாஸ்தவமானால் அண்ணாஸ்வாமியின் இரண்டு க்ரந்தங்களும் பங்கமடைந்ததாகத் தடையேயிராது. இரண்டாம் பட்டம் ஸ்வாமியாவது மூன்றாம் பட்டம் ஸ்வாமியாவது இயற்றினதாக ஒருஓலைப்புத்தகமாகிலும் காட்டப்படுமானால் தடையின்றி இசையலாம், ஸ்ரீ. உ. வே. சேட்

லூர் நரஸிம்ஹாசாரியர்தாமெழுதிய தேசிக சரித்திரத்தில் இரண்டு மூன்றிடங்களில் எழுதியிருப்பதை அண்ணாஸ்வாமி தமது நூல்களில் அப்படியே உதாஹரித்திருக்கிறாரே. இரண்டாவது பட்டக்காரரும் மூன்றாவது பட்டக்காரரும் பணித்ததாகச் சொல்லப்படுகிற வைபவக்ரந்தங்கள் இப்போது கிடைக்காவென்றும் முன்னமே லோபித்துவிட்டனவென்றும், மற்றுமுள்ள சில க்ரந்தங்களும் பரஸ்பரவிருத்தங்களாகவேயிருக்கின்றனவென்றும், பிற்பட்டவர்கள் எழுதியுள்ள சரித்திரங்களெல்லாம் விமர்சமில்லாமலும் மாறுதலாகவும் தேசிக ஸ்ரீஸூக்திவிருத்தமாகவும் இருக்கின்றனவென்றும் சேட்லூர் ஸ்வாமி ஸ்பஷ்டமாக எழுதி வெளியிட்டிருப்பதை யாரும் மறைக்கமுடியாதே. "பழைய க்ரந்தம் அந்த ஸ்வாமிக்குக் கிடைக்காமையால் அவர் அவஸரப்பட்டு அப்படியெழுதிவிட்டார்; எமக்குக் கிடைத்தேயிருக்கின்றது" என்கிறீர்களா? அப்படியானால் அந்த ஸ்ரீ கோசம் காட்டப்படவேண்டியது மிக அவசியம். இந்த மதுரைமாநகரில் தமிழ்ச்சங்கம்போன்ற பொதுஸ்தலங்களில் ஓரிடத்தில் அந்த ஸ்ரீ கோசத்தை வைத்திட்டு அனைவரும் கண்டுகளிக்கும்படி செய்தால் மிக நலமாகும். இங்ஙனன்றிக்கே, பிற்பட்டவர்கள் ஸமீபகாலத்தில் ஏதோ எழுதி அச்சிட்டிருக்குமவற்றைக் காட்டுவதானால், இவை மிகவும் தவறுதலானவை என்பதை ஸ்ரீ சேட்லூர் ஸ்வாமியே நிரூபித்திருப்பதால் இவ்விஷயத்தில் பதிலளிக்கவேண்டிய சிரமம் நமக்குச் சிறிதுமில்லை.

10. சென்னை கவர்ன்மெண்டு லைப்ரெரியில் R. No. 104. H. 38-14. என்கிற லக்கமுள்ள ஓலைப்புத்தகம் தேசிகனுடைய வைபவப்ரகாசிகையென்றும், அதில் இந்த பாத்ரத்தனியனைப்பற்றின ப்ரஸ்தாவமே கிடையாதென்றும் அண்ணாஸ்வாமி நிரூபித்திருப்பதற்கு மௌனந்தானே சரணம்?

11. இனி, இத்தனியனுக்கு அஹோபிலாசார்யர் போன்ற பெரியவர்கள் வியாக்கியானம் செய்திருப்பது இத்தனியனுடைய ப்ராசீநத்வத்திற்குப் போதுமான அத்தாட்சியென்றெழுதப்படு

கிறது. இதைப்பற்றி ஏற்கனவே விசாரமுண்டாகி, சென்ற ஆவணி மாதத்தில் வெளிவந்த ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ பத்ரிகை ப்ராமாணிகஜநத்ருப்திகரமான பதிலை வெளியிட்டிருப்பது ப்ரஸித்தம். அதில் பக்கம் 242 முழுவதும் இந்த விசாரமே யுள்ளது. அந்த அஹோபிலாசார்யருடைய காலத்தை நிரூபிக்க முயன்ற திருவையாறு காலேஜ் ப்ரொபஸர். சிரோமணிஸ்வாமி யொருவர், "கி. பி. 1800க்கு முன்னேயிருந்தவர் அஹோபிலாசார்யர்" என்று இவ்வளவு மாத்திரமே எழுத சக்தரானார். கி. பி. 1700க்கு ஸமீபகாலத்தில் ஜனித்ததாக ஒப்புக்கொள்ளப்படுகிற இந்தத் தனியனுக்கு அஹோபிலாசாரியர் வியாக்கியானமியற்றி யுள்ளாரென்பது பயனற்ற பேச்சு.

12. மேலும் அந்த அஹோபிலாசார்யருடைய வியாக்கியானத்திலுள்ள வாசகங்களே இத்தனியன் இடையிலே வந்து தோன்றினதென்பதை நன்றாகக் காட்டுகின்றது. "கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான எல்லா திவ்ய தேசங்களிலும் இந்த ராமாநுஜ பாத்ரத்தனியனே சொல்லவேண்டியதாயிருந்தும் அப்படிச் சொல்லாமல் சில அஸூயாளுக்கள் அதிக்ரமமாகத் தங்களுக்கு வேண்டியபடி செய்துவந்தாலும் (விநாசாய ச துஷ்க்ருதாம்) என்றும் (க்ஷிபாமி) என்றும் ஸங்கல்பித்திருக்கிற ஸர்வேச்வரன் அவர்களைத் தொலைத்தேவிடுவான்" என்று அந்த அஹோபிலாசார்யவியாக்கியானத்தில் எழுதியிருப்பதனால் அவருடைய திருவயிற்றெரிச்சல்தான் விளங்குகின்றது. அவருடைய காலம் 400, 500 ஆண்டுகட்கு முற்பட்டது என்று இவர்கள் நிரூபிக்க முயன்றாலும், அந்த காலத்திலும் இந்தத் தனியன் ஸந்நிதிகளில் ப்ரவேசம் பெறவில்லையென்பதும், ஸ்ரீசைலேசத்தனியன்தான் எங்கும் அநுஸந்தானத்திலிருந்தது என்பதுமே அவருடைய வியாக்கியானத்தினாலும் தேறுகின்றதென்பதில் என்ன ஸந்தேஹம்?

13. "ஸர்வசிஷ்ட பரிக்ருஹீதமான விஷயத்தை குயுக்திகளால் அபலபித்தால் வேதங்களிலும் க்ஷோபம் ப்ரஸங்கிக்கும்"

என்று எழுதப்படுகிறது. குயுக்திகளோ ஸுயுக்திகளோ என்பதை இரண்டு கக்ஷியிலும் சேராத மத்யஸ்த மஹான்கள் நிர்ணயிக்க வேணுமேயன்றி, பிரதிபக்ஷிகளான இவர்கள் சொல்லுவது பயன் படுமோ? ஸ்ரீ பாஷ்யகாரர், ச்ருதப்ரகாசிகாசார்யர், தேசிகன் முத லான மஹநீயர்கள் மலைமலையாக அருளிச்செய்திருக்கின்ற யுக்தி களையுமன்றோ பிறர் குயுக்திகளென்று கூசாமல் எழுதியுள்ளார்கள். விமதர்கள் இப்படி யெழுதுவது ஸஹஜமே. இதனால் ஒரு ஸமீஹித மும் ஸித்தமாகாது. வேதங்களிலும் க்ஷோபம் ப்ரஸங்கிக்குமென்ப தற்காகவே அப்ராமாணிக விஷயங்களை யுக்திகளாலும் பிரமாணங்க ளாலும் நிரஸிக்காமலிருக்கமுடியுமோ? உண்மையில் இத் தனியன் ஸர்வ சிஷ்டபரிக்ருஹீதமாயிருந்தால் கண்ணழிவு சொல்ல இட மிராதுதான். ஏகதேசிகளிலுங்கூட இத் தனியனை வெறுக்கின்ற வர்களே அதிக ஸங்க்யையாகத் தேறுகிறார்கள். ஸமீபத்தில் நடந்த இத் தனியன் உத்ஸவத்தில் ஸ்ரீதேசிகபக்த வகுப்பினர் ஏறக் குறைய 3000 ஸ்வாமிகள் குழுமியிருந்தார்கள். அவர்களுள் 63 ஸ்வாமிகள் இத் தனியனை உணர்ந்தவர்கள் என்றும் மிகுந்தவர் களில் பாதிபேர்கள் இதில் அத்வேஷமுடையவர்களென்றும், பாதி பேர்கள் மிக்க வெறுப்புடையவர்கள் என்றும் கணக்குத் தேறி நின்றது மிகப்ரஸித்தம். "இப்படிப்பட்ட நீங்கள் இவ்வுத்ஸவத் திற்கு ஏன் வந்தீர்கள்?" என்கிற கேள்வியுமுண்டாயிற்று. ஏக காலத்தில் குழுமுகின்ற ஸ்ரீவைஷ்ணவ ப்ருந்தத்தை ஸேவிப் பதையே புருஷார்த்தமாக எண்ணி வந்தோம் என்றார்கள் பலர். சிரமமில்லாமல் 10 நாளைக்கு நல்ல உணவு கிடைக்கிறதே யென்று வந்தோம் என்றார்கள் பலர்.

14. அன்றியும், அப்போது வ்யபதிஷ்டர்களாயிருக்கின்ற வித் வான்களாய் வந்திருந்தவர்கள் இந்தத் தனியனையும் வாழித் திரு நாமத்தையும் நெட்டுருப்பண்ண மிகவும் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். சிலர் அதற்கு அடியோடு இசையவில்லை. சிலர் இசைந்து மிகவும் சிரமப்பட்டு நுனிநாவில் வைத்து ஒப்பித்தார்கள். பலர் பலசந்தை கள் சொல்லியும் வாழித் திருநாமம் வாயில் நுழையப் பெறவே

யில்லை. 'எதுக்கு இப்படி யெங்களைப் படுகொலையடிக்கிறீர்கள்? இதைவிட, ஒரு வண்டி நெல்லைத்தந்து குத்தும்படி நியமிக்கலாமே' என்று பரிதபித்து க்ஷேபித்தவர்கள் பலபலர்.

15. உண்மை இப்படியிருக்கும்போது ஆஸேதுஹிமாசலம் இதற்குப் பரிக்ரஹமிருப்பதாகப் பலகால் எழுதுவது பரிஹாஸ்யமாகவன்றோ இருக்கின்றது. ஸ்ரீ காஞ்சியில் நாவல்பாக்கம் ஸ்வாமி யென்று ஒரு வித்வான் ப்ரஸித்தர். அவரும் இத்தனியனுத்ஸவத்தில் ஒரு உபந்யாஸகராக வரிக்கப்பட்டிருந்தார். ஒவ்வொரு உபந்யாஸகரும் உபந்யாஸம் ஆரம்பிக்கும்போது ராமாநுஜ தயாபாத்ர ச்லோகத்தை மங்கள ச்லோகமாக முன்னம் அநுஸந்தித்து விட்டுப் பிறகுதான் உபந்யஸிக்கவேணுமென்று நிர்ப்பந்தம் கடுமையாகச் செய்யப்பட்டிருந்தது. இந்த நாவல் பாக்கம் ஸ்வாமி அந்த நிர்ப்பந்தத்திற்கு உட்படாமல் ஸ்ரீமாந் வேங்கடதனியனையே சொல்லி உபக்ரமித்தார். அப்போதே பலர் ஆக்ஷேபித்தார்கள். "தேசிகனுடைய தனியனல்லாததையும், தமிழ்ப் பாட்டுக்காக யாரோ சிலர் சொல்லி வருவதையும் நான் என் வாக்கினால் சொல்ல மாட்டேன்; கேட்க விருப்பமில்லாதவர்கள் எழுந்து போங்கள்" என்று ஸிம்ஹகர்ஜனம் பண்ணினர். உடனே சிலர் எழுந்தும் சென்றார்கள். விரிப்பிற் பெருகுமென்று நிற்கின்றோம்.

16. "இத்தனியனுக்கு உத்ஸவம் கொண்டாடவேண்டியது அவசியமா என்ற கேள்விக்கு ஸமாதானம்" என்று தொடங்கி யெழுதியுள்ளவற்றை இனி விமர்சிப்போம். உத்ஸவம் கொண்டாடுவதைப்பற்றி யாருக்கு என்ன ஆக்ஷேபம்? அது அவரவர்களுடைய அபிமானத்தைப் பொறுத்தது. இத்தனியன் ஜனித்து 600 வருஷமாயிற்று என்கிற ஒரு பிரட்டுப்பேச்சை வெளியிடாமல் திருநக்ஷத்ர பரிபாலனம் செய்கிறோமென்று நடத்திக்கொண்டால் அத்தனியனைப் பற்றின உண்மைகளை ப்ரஸ்தாவிக்க ப்ரஸக்தியேயிராதன்றோ. நவீனமான இதனை ப்ராசீனம்போல் காட்டிக் கொள்ள முயன்றதனாலன்றோ உண்மைகளை எடுத்தோதவேண்

டிற்று. ஒரு குழந்தைக்கு அப்தபூர்த்தி என்று சொல்லி நடத்த வேண்டிய காரியத்தை ஷஷ்டிபூர்த்தியென்று சொல்லி நடத்தினல் நகைக்காமலிருக்கமுடியுமோ ?

இந்தத் தனியன் ஸ்ரீதேசிகசிஷ்யரான ப்ரஹ்மதந்த்ர ஸ்வ தந்த்ர ஸ்வாமியால் பணிக்கப்பட்டதுதான் என்று தேறிவிடுமானல் இதைப்பற்றி வாய்திறக்க யாருக்கு என்ன இடமுள்ளது? ஸர்வாத் மநா அஸம்பாவிதமென்று ஸ்தாபிதமான அவ்விஷயத்தையே இவர்கள் எத்தனை தடவை எழுதிக்கொண்டாலும் உண்மை மறைந் திடாதே. “ஒன்றுன ப்ரம்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி பணித்த தாகவே இதனை நாங்கள் பரம்பரையாக அநுஸந்தித்து வருகிறே மாகையால் இதை ஏன் நீங்கள் ஆக்ஷேபிக்கிறீர்கள்” என்று கேட் கிறுர்கள். “அத்தனியனைப்பற்றி எங்களுடைய முன்னேர்கள் பரம்பரையாகப் பணித்து வருவதையே நாங்கள் வெளியிட்டுக் கொண்டால் இதற்காக நீங்கள் ஏன் வருந்துகிறீர்கள் ?” என்கிற விதுதான் அதற்குற்ற விடையாகும். மிகவும் தவறுதலானவொரு விஷயத்தைப் பரம்பராஸித்தமென்று சிலர் சொல்லிவிட்டால், அது பிசகு என்பதைக் காட்டித் தீரவேண்டிய ஆவச்யகதையிருக் கும்போது வாளாவிருப்பது தகுதியாமோ ? ஸச்சரித்ர ரக்ஷை, ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷை முதலான க்ரந்தரத்னங்களினல் ஸ்ரீதேசிகர் சில உண்மைகளைக் காட்டியருள முன் வந்ததுபோல் அண்ணு ஸ்வாமியும் இக்காலத்திற்கு அவசியமான ஆராய்ச்சிகளைச் செய்து உண்மைகளை நிரூபித்தல் மிகவும் உரியதேயாகும்.

18. “இந்தத் தனியனை ஸ்ரீ ரங்கநாதனும் ஆதரித்தபடியால் உபயகலையார்களும் கொண்டாடவேணும்” என்றெழுதுகிறுர். ஸ்ரீ ரங்கநாதன் ஆதரித்தது மெய்யாயிருந்தால் வடகலையார்களைக் காட்டிலும் தென்கலையார்களே இதை அதிகமாகக் கொண்டாடக் கடமைப்பட்டவர்களாவர், தென்கலையார்களுக்கு தேசிகனிடத்தில் வித்வேஷ முள்ளதாக இவர்கள் நினைப்பது பிசகு. வித்வேஷ மிருக்க நியாயமேயில்லை. அறிவிலிகளும் அரஸிகர்களும் த்வேஷிப் பது ஒரு விஷயமாக எடுத்துக் கூறத்தக்கதேயன்று. பரம பவித்

திரமான ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார மஹாக்ரந்தத்தில் "த்ருடபூர்வச் ருதோ மூர்க்க:" இத்யாதிகளான வசைமொழிகளை ஊடேயூடே சிலர் சேர்த்திருப்பதை ப்ரக்ஷிப்தமென்று தெரிந்துகொள்ளாத சில மஹான்கள் தேசிகரிடத்தில் விப்ரதிபத்தி பண்ணினால் அவர்களும் உண்மை தெளிந்து அநுதபிக்கவே ப்ராப்தமாகும். ஆழ்வார், நாதமுனிகள், ஆளவந்தார், உடையவர், பட்டர், நம்பிள்ளை, பிள்ளை லோகாசாரியர் முதலான ஆசார்யர்கள் சாத்திக்கொண்டிருந்த திருமண்காப்பையே தாமும் சாத்திக்கொண்டிருந்து அப்படியே அனேக திவ்ய தேசங்களில் நாளைக்கும் நித்யாராதன, உத்ஸவாதிகளை அநுபவித்துவருகின்ற தேசிகனுக்கு, மிகவும் அநாவச்யகமாகச் சிலருடைய அபிமானம் ஏற்பட்டு, அதனால் திருமண்காப்பு விபர்யாஸமும் உண்டாகி, அதனால் சச்சரவுகளும் அதிகரித்தபடியால் அப்படிப்பட்ட தேசிக பிம்பங்களில் தென்கலையார்கள் விப்ரதிபத்தி கொள்வது கதஞ்சித் உசிதம் என்று கொண்டாலும், ஆசார்யஸார்வபௌமரான அந்த மஹநீயரிடத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்களில் எவரும் பகை பாராட்ட நியாயமேயில்லை. தேசிக திவ்யஸூக்திகளை ஆங்காங்கு உதாஹரித்தருளின மணவாள மாமுனிகளும் அவரிடத்தில் பகை கொண்டாரில்லை. மாமுனிகளுக்குப் பிற்பட்டவர்களும் பலர் [வேதாந்தவாதாவளி யருளிச்செய்த மைஸூர் அனந்தாழ்வான் வரையிலுமுள்ளவர்கள்] தம் தம் க்ரந்தங்களில் தேசிகனைப்போற்றியேயுள்ளார்கள். சில திவ்ய தேசங்களில் வீண்வப்பு வியவஹாரங்கள் வந்துபுகுந்த ஒரு நூற்றாண்டுக்கு உட்பட்ட காலத்தில்தான் சில காரணபாஸங்களாலே சில தென்கலையார்களுக்கு தேசிகரிடத்தில் ப்ரதிபத்திக்குறை உண்டாகத் தொடங்கிற்று என்பது அபலபிக்க முடியாதது. திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி ஸந்நிதி ஒன்றை மாத்திரம் இப்போது எடுத்துக்கொள்வோம். இங்கு வடகலையாருக்கு எக்காலத்திலும் எவ்விதமான ப்ரவேசமும் இருந்ததில்லை. இது நிர்விவாதம். இப்படிப்பட்ட ஸந்நிதியில் நாளைக்கும் தேசிகனுக்கு ஆச்சரியமான மஹோத்ஸவம் நடைபெற்றுவருகிறது. திருநக்ஷத்ரத்தன்று ஸ்ரீ பார்த்தஸாரதியுடனே தேசிகனுக்குப் பெரிய திருவீதிப் புறப்பாடு முதலிய வாசாமகோசர வைபவங்களை நடத்தி வருமவர்கள் தென்கலையார்களேயன்றி மற்றையோரல்லர்.

19. ஒன்றான ஸ்ரீரங்கத்திலும் நாச்சியார் ஸந்நிதித் திரு முன்பே தேசிகன் சந்நிதியுள்ளது. தேவஸ்தானம் முழுவதிலும் எந்தத் திருமண்காப்பு மாமூலாக விளங்கி வருகின்றதோ அதுவே தான் அங்கு தேசிகன் ஸந்நிதிவாசல் கொடுங்கையிலும் மிகப் புரா தனமென்று மதிக்கக் கூடியதாக காரைக் கட்டிடமாய் நாளைக்கும் விளங்கி வருகின்றது. உள்ளே அவருடைய திரு நெற்றியில் புண்ட்ரத்தை மாற்றமுயன்றது முதலாகவே அங்குக் கலஹங்கள் அதிகரித்தன. அவருக்கு உத்ஸவாதிகள் நின்றதும் அக்காரணம் பற்றியே, மற்றும் சில திவ்யதேசங்களில், தென்கலைத் திருமண் காப்புள்ள தேசிகர் இருக்கவே தகாது என்ற ஆக்ரஹத்துடன், அதிகாரம் பெற்ற வடகலையார்களே தேசிகவிக்ரஹங்களை அப்புறப் படுத்திவிட்டார்கள் என்பதும் நாடறிந்தது.

20. கிம் பஹுநா? தேசிகனுடைய திருவவதாரஸ்தலமாகிய ஒன்றான தூப்புலில் கி. பி. 1874ௗ மார்ச்சு மாதம் வரையில் தென்கலைத்திருமண்காப்புதான் இருந்ததென்றும், அதைச் சில வடகலையார்கள் இடித்துப்போட்டு ஆக்ரமித்தார்கள் என்றும் அபரதேசிகராக ஜகத்ப்ரஸித்தரான ஸ்ரீமத் திருப்புட்குழி ஸ்வாமி யே நியாயாலயத்தில் எழுத்துமூலமாக உறுதிமொழி கொடுத்திருப் பது மறைக்க முடியாததன்றோ. அண்ணுஸ்வாமியின் பாத்ரதத் வத்தில் (பக்கம் 218ல்) இவ்விஷயம் விசதமே. அந்த ரிக்கார்ட்டின் அஸல் காபி தேவையானாலும் அப்படியே போட்டோ பிடித்து வெளியிடுவிக்கவும் தடையில்லை. இவற்றால் நிஸ்ஸந்தேஹமாக ஏற்படுகிற யதார்த்தம் என்னவென்பதை அவரவர்களே உள்ளத் தில் உணர்ந்துகொள்ளலாம். "உன் கடைத்தலையிருந்து வாழும் சோம்பர்" என்றும் "பதியே பரவித்தொழும் தொண்டர்" என்றும் அநாதிகாலமாகவே திவ்யதேச பரிபாலகர்களாகச் சிறப்பித்துக் கூறப்படுகின்ற தென்கலையார்களே மற்ற ஆசார்யர்களோடொப்ப ஸ்ரீதேசிகனையும் ஸந்நிதிகளில் பிரதிஷ்டிப்பித்து ஆராதித்து வரு மவர்கள் என்கிற யதார்த்தத்தை யாரும் மாற்றகில்லார். அல்ப காரணங்களால் பகைபெருகிச் செல்லுமிக்காலத்திலுங்கூட ப்ராப்த ப்ரகரணங்களில் ஸ்ரீமாந் வேங்கடதனியனை அநுஸந்தியாதார் இலர்,

"இதை ஸந்நிதிகளில் தென்கலையார்கள் ஏன் அநுஸந்திப்பதில்லை"? என்று ஒரு கேள்வியைக் கிளப்பிக்கொண்டு 'தேசிகனிடத்திலுள்ள த்வேஷத்தினால்தான் அநுஸந்திப்பதில்லை' என்றும், 'இவ்விதமாகவே தேசிகத்வேஷம் காரணமாகவே ராமாநுஜதயாபாத்ராநுஸந்தானத்தையும் இவர்கள் விட்டார்கள்' என்றும் தாமே ஒரு முடிவு தீர்த்துக்கொள்வது பொருத்தமற்றது. நாதமுனிகள் ஆளவந்தார் எம்பார் ஆழ்வான் பட்டர் நஞ்சீயர் நம்பிள்ளை வடக்குத் திருவீதிப்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளை பிள்ளைலோகாசாரியர் முதலான ஆசாரியர்கள் உலகுக்கு மஹோபகாரகர்களாக இருந்தும் அவர்களில் ஒருவருடைய தனியனாவது ஸந்நிதிகளில் அநுஸந்திக்கப் பெற்று வருகின்றதோ? அவரவர்களுடைய வருஷத் திருநக்ஷத்ரதினத்தில் மட்டுமாவது அவரவர்களின் தனியன்களை அநுஸந்திப்போமென்று நினைத்தாலும், உபயகலையாரும் ஸம்மதித்தாலுங்கூட, 'வழக்கமில்லாதது வந்துபுகக்கூடாது' என்கிற தடைதான் ஏற்பட்டு வருகிறது. தென்கலையாருடைய பரிபூர்ணாதிகாரம் பெருகிச்செல்லும் பல தலங்களில் ஐப்பசியில் திருவோணத்தன்றுகூட, லோகாசார்யாய குரவே என்கிற தனியன் அநுஸந்திக்கப்படாமலிருப்பதைக் காணலாமே. இதற்குக் காரணம் பிள்ளைலோகாசாரியரிடத்தில் த்வேஷமோ? பிள்ளைப்பெருமாளையங்காருடைய அற்புதமான பிரபந்தங்களை ஒருவருமே ஸந்நிதிகளில் ஸேவிப்பதில்லை. அவரிடத்தில் த்வேஷமா இதற்குக் காரணம்?

21. ஸந்நிதிகளில் அநுஸந்திக்கிற கிரமம் என்பது ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞையையும் பகவதாஜ்ஞையையும் பொறுத்ததாதலால் இதில் வீணான குசோத்யங்களைச் செய்துகொண்டு இதனால் ஒரு ஸமீஹிதம் ஸாதிக்கப்பார்ப்பது விவேகிகளுக்கு உற்றதன்று.

22. ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞையின்படி நடந்துவந்த திவ்யப்ரபந்தாநுஸந்தானக்ரமம் மணவாளமாமுனிகளின் காலத்தில் ஸ்ரீரங்கநாத திவ்யாஜ்ஞையடியாகச் சில விசேஷங்களைப் பெற்று, வன்பெருவானகமுய்ய அமரருய்ய மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்யத் துன்பமிகுதுயரகல அயர்வொன்றில்லாச் சுகம் வளர அகமகிழும் தொண்டர்வாழ விளங்கிவருமடைவிலே பொறுமைகொண்டு இவர்

கள் எத்தனை யெழுதினாலும் ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா என்னப்பட்ட ஆஜ்ஞையைபோன்றதான இந்த ஸ்ரீரங்கநாத திவ்யாஜ்ஞைக்கு நித்ய ஸ்ரீர் நித்யமங்களமேயாம்.

23. அழகிய மணவாளன் ஸந்நிதியில் ஆஸ்தானத்தில் அரையர் ஸேவையே தொன்றுதொட்டுள்ளது. அவர்கள் தனியன்களை மாநஸாநுஸந்தானம்பண்ணி ஆழ்வார்ஸ்தானீயர்களாய் அருளிச்செயல் மாத்திரமே இசைபாடிவருகிறார்கள். திருவீதிப்புறப்பாடு முதலான ஸமயங்களிலும் ஆழ்வாராசார்யர்கள் ஸந்நிதிகளிலும் ஸ்ரீசைலேசத்தனியனேயுள்ளது. இந்தத் தனியனைப் பெரிய பெருமாளும் ஸ்ரீரங்கநாச்சியாரும் நாடோறும் விச்வரூபமானவுடனே பட்டர் கைங்கர்யமான பஞ்சாங்க படனத்திலே உபக்ரமமாகத் திருச்செவி சாத்தியருளுகையாலே வேறொரு தனியனுக்குப் பிறர் ஏறிடும் ஏற்றமெல்லாம் 'காக்கைக்குத் தன்குட்டி பொன்குட்டி' என்றும் 'ஸர்வஃ காந்தமாத்மீயம் பஶ்யதி' என்றுமுள்ள கணக்கிலே பொருந்தக் குறையில்லை.

24. "ஒரு நல்லகாரியத்தைப் புதிதாக ஆரம்பிப்பதால் விபரீதம் வந்துவிடுமென்பது விந்தையிலும் விந்தை" என்றெழுதுகிறார். நல்லகாரியம் செய்வதனால் விபரீதம் விளையுமென்று ஒரு உன்மத்தனும் சொல்லான். "[illegible]" என்று சொல்லுவதொன்றுண்டு. அவ்விதமான வார்த்தையும் பிரகிருதத்தில் சொன்னாரில்லை. தூப்புலில் திருவவதார ஸ்தலத்தில் ஒன்றான தேசிகன் எழுந்தருளியிருக்க, அவரை விட்டிட்டு, அவர்க்குமுன்பே சிறுபிள்ளைகள் விளையாடுவதுபோல் சில மேல்நாட்டு விக்ரஹங்களைக் கொணர்ந்து ஒரு தனிக்ருஹத்தில் வைத்து ஆரவாரங்கள் செய்வதை நல்லகாரியமென்று விவேகிகள் ஒப்புவர்களோ? இப்படிப்பட்ட காரியங்களால் விபரீதம் நேருமென்றால் இப்போது சிற்றமேயாயிடினும் காலவிசேஷங்களிலே [illegible]மென்று போற்றவே ப்ராப்தமாகும்.

25. திருநாராயணபுரம் மணவாளமாமுனிகள் ஸந்நிதியில் நடைபெறுகின்ற ஈடு உத்ஸவத்திற்கு செல்வப்பிள்ளை யெழுந்தருள்வது 1922ஆம் வருஷம் முதலாகவே யாதலால் புது வழக்கமான அந்த காரியத்தை அண்ணங்கராசாரியர் ஏன் ஆக்ஷேபிக்கவில்லை? என்கிற கேள்விக்கு என்ன ப்ரஸக்தியோ அறியோம். பெருமாளுடைய திருமண்டபப்படிகள் பக்தர்களின் விருப்பத்தின்படி புதிது புதிதாக ஒவ்வொரு திவ்ய தேசத்திலும் அநாதியாகவே நடந்து வருகிறது. மிக நல்லகாரியமான இதை ஆக்ஷேபிக்க என்ன அவசியமுளது? க்ரமமான மணவாளமாமுனிகள் ஸந்நிதியில் நடைபெறும் ஈடு உத்ஸவத்தை வேறொரு புதுக்ருஹத்தில் நடத்தக் கோலி ஸம்ப்ரமங்கள் பண்ணினால் மஹான்கள் ஆக்ஷேபித்தே தீருவார்கள். மாமுனிகள் ஸந்நிதியில் ஈடு உத்ஸவம் நடத்தாமல் திருக்குறள் உத்ஸவம் என்றோ, நாலடியார் உத்ஸவம் என்றோ ஒரு புது உத்ஸவம் நடத்தப்புகுந்தால் அதையும் ஆக்ஷேபிக்க அவசியமுண்டு. அடைவுபட நடத்தவேண்டியதும் நடந்துவருவதுமான உத்ஸவத்திற்குக் கால விசேஷங்களில் விபவாதிசயங்கள் ஏற்பட்டால் அதை ஆக்ஷேபிப்பது அஸமஞ்ஜஸமன்றோ?

26. திவ்யப்ரபந்தங்கள் தமிழானதால் அதன் தொடக்கத்தில் அநுஸந்திக்கப்படும் தனியனும் தமிழில் இருக்கவேண்டுமென்று அண்ணாஸ்வாமி எழுதியிருப்பதுபோல் காட்டி தூஷிப்பது அநுக்தோபாலம்பம். "அபிவா மாதரம் கச்சேத் ந கச்சேத் தேவதாஸிகாம்" என்கிற வசனத்தினால் மாத்ருகமநவிதி ஸ்பஷ்டமாக ஏற்படுகிறதென்று ஒரு தர்மசாஸ்த்ரப் புலவர் நிரூபித்தாராம். அதுதான் நினைவுக்கு வருகின்றது. ஏற்கனவே சிறப்புப்பெற்றுள்ள ஸ்ரீமாந் வேங்கடதனியனை உபேக்ஷித்து பாத்ரத்தனியன் ஸ்ருஷ்டிக்க வேண்டியகாரணமில்லை என்பதை அண்ணாஸ்வாமி உபபாதித்து வருகையில் (பாத்ரதத்வத்தில் பக்கம் 211ல்) "த்ராவிட க்ரந்த காலக்ஷேபத்திற்காகத் தனியே ஒரு தனியன் ஏற்பட்டதென்றால் அது தமிழ்ப்பாசுரமாக இருந்தாலாவது இசையலாம்" என்றெழுதியிருப்பதன் மேல் தூஷணமுரைக்க இடமுண்டோ? "இயற்பா ஆயிரத்திலுமுள்ள பிரபந்தங்களுக்கெல்லாம் நியமேந தமிழ்த்

தனியன்களேயிருப்பதால் அவ்வண்ணமாக தேசிகன் தனியனும் தமிழ்வேதத்திற்குத் தமிழாகவேயிருக்கட்டுமென்று கருதித் தமிழில் ஒரு புதுத்தனியனை ஒருவர் இயற்றினார் என்று சொன்னாலாவது சிறிது பொருத்தமாயிருக்கும்;” என்று அண்ணாஸ்வாமி கருதியதில் என்ன பிசகு?

27. ஸ்ரீமாந் வேங்கடத்தனியனில் குறைகண்டு பாத்திரத் தனியன் இயற்றப்பட்டதாக அண்ணாஸ்வாமியே கல்பனை செய்து கொண்டார் என்று இவர்கள் எழுதுவது ஸ்வபக்ஷக்ரந்தங்களை அடியோடு பாராமையினலாகும். பாத்ரத்தனியன் பிறந்ததாகக் கூறுகிற புத்தகங்களெல்லாவற்றையும் நோக்கலாம். ஒரு தனியன் இருக்க வேறொரு தனியனை எதுக்காக இயற்றினீர்? என்று ப்ரம்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமியை ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமி கேட்டதாகவும், ஸ்வாமியினுடைய ஆசாரியரைப்பற்றி அந்தத்தனியனில் ப்ரஸ்தாவமேயில்லாத குறை தீர்வதற்காகவே இஃது இயற்றினது என்று ஜீயர் விஜ்ஞாபித்ததாகவும், அஹஹ! இந்த விசேஷம் எனக்கும் தெரியாமல் போயிற்றே! என்று தேசிகனும் வியந்ததாகவும் இப்படிப்பல கதைகளை எழுதிவைத்திருப்பவர் அண்ணாஸ்வாமியல்லரே. ஒவ்வொரு சுவடியில் ஒவ்வொரு விசித்திரமன்றோ காண்கிறது. ஆனதுபற்றியே சேட்லூர் ஸ்வாமி இவையெல்லாம் அபத்த பஞ்சாங்கம் என்று தள்ளி, தாம் ஸுபத்த பஞ்சாங்கம் எழுதுவதாக ஆரம்பித்துத் தாமொரு நூதன ஸ்ருஷ்டிபண்ணி வைத்தார். அதில் அபத்தம் இல்லை; அஸம்பத்தந்தான் அதிகம்:

28. மணவாளமாமுனிகள் ஈடுகாலக்ஷேபம் ஸாதித்துத் தலைக்கட்டும் நன்னாளிலே ஸ்ரீசைலேசத்தனியன் அவதரித்ததாக இதிஹாஸமாகையாலே, அதுவரையில் காலக்ஷேபத்தில் அந்வயித்திருந்த சிஷ்யவர்க்கங்கள் ஏதேனுமொரு ச்லோகத்தை மாமுனிகளின் தனியனாக அநுஸந்தித்தேயிருப்பார்கள்; ஸ்ரீசைலேசத்தனியன் அவதரித்தபின்பு அந்தத்தனியன் மறைந்ததானது ஸ்ரீரங்கநாத திவ்யாஜ்ஞாரூபமான தனியன் முன்னே தலைகாட்டி நிற்கமாட்டாமையினால்—என்று அண்ணாஸ்வாமி யெழுதியது அநவத்யமே.

ராமாநுஜதயாபாத்ரத் தனியன் காம்பீர்யமற்றதென்று அண்ணு ஸ்வாமி சொல்லுவது யுக்தமானல் ஸ்ரீசைலேசத்தனியனும் தாத்ருசமாகக் கொள்ளப்படவேண்டியதுதானே என்று க்ஷேபிப்பது அயுக்தம். தேசிகனுடைய தனியனுக ஸமர்த்தமான ஸ்ரீமாந்வேங்கட தனியனே யபேக்ஷித்து ராமாநுஜபாத்ரத்தனியன் காம்பீர்யமற்றது என்ருல் வேறொருவருடைய தனியனைப்பற்றி ப்ரஸங்கிக்க ப்ரஸக்தி என்னே? இத்தகைய அஸம்பத்தோக்திகளுக் கெல்லாம் நாம் மறுமாற்றமுரைப்பது ஹேயமே.

29. கல்யப்தேஷு சதுஸ்ஸஹஸ்ர சதபங்க்த்யப்தே என்கிற ஒரு சுலோகத்தைக்கொண்டு பாத்ரத்தனியனுடைய ஜநநகாலத்தைச் சிலர் குறிப்பிட்டிருந்தார்கள். மேற்குறித்த சுலோகம் வ்யுத்பந்நர் இயற்றியதன்று என்பதை அண்ணுஸ்வாமி தத்வக்ரந்தத்தில் (213 முதலிய பக்கங்களில்) பரக்க நிரூபித்திருக்கிருர். அதைப் பற்றி இப்போது இவர்கள் எழுதியுள்ள பதிலை விமர்சிப்போம். [கதேஷு ஸத்ஸு] என்று அத்யாஹாரம்செய்துகொண்டு அந்வயித்தால், கலி வருஷங்கள் 4440 சென்றபிறகு என்ற அர்த்தம் மிகப் பொருத்தமானது என்றெழுதியுள்ளார். 4440-ஆவது சென்றபிறகு இருக்கக்கூடிய வருஷம் 4441 தான். அதில் பஹுதான்ய-ஆவது கிடையாது. வர்த்தமாநேஷு ஸத்ஸு என்று சொன்னல் இவர்களுக்குப் பயன்படுமேயல்லது, கதேஷு ஸத்ஸு என்ருல் பெரும் பொய்யாகவே தேறி நிற்கும். வர்த்தமாநேஷு ஸத்ஸு என்பதற்கு வியாகரணம் இடந்தரவில்லையென்று அண்ணுஸ்வாமி நிரூபித்தது சிலாசாஸனமாயிற்று. பஞ்சாங்கங்களில் கலிகதாப்தமென்று சிலர் போடுவதும், கல்யப்தவர்த்தமாநாப்தமென்று சிலர் போடுவதும் ப்ரஸித்தம். அதில் ஒரு வருஷம் வ்யத்யாஸப்பட்டே தீரும். அதனையறியாமல், கதேஷு ஸத்ஸு என்று அத்யாஹரித்துக்கொண்டால் பொருந்திவிடுகிறதென்பது பரமசாதுர்யமே. "அங்காநாம் வாமதோ கதி:" என்பதைக் கொண்டு யாரும் ஒரு பூர்வபக்ஷமும் செய்திருக்கவில்லை. ஆகவே, "அந்த நியமம் இவ்விடத்தில் ப்ராப்தமாகாது" என்று இவர் எழுதுவது வீண். 4440-ஆவது வருஷத்தில் என்கிற பொருள்

சதுஸ்ஸஹஸ்ர சதபங்க்த்யப்தே என்கிற சொல்லினுல் கிடைக்காது என்பதை ஸ்தாபித்து வைத்ததுதான் இவர்களால் தீர்ந்தது.

30. பட்டர் முதலான மஹான்களின் ஸ்ரீஸூக்திகளிலும் பிழைகள் இருப்பதாகவும், ஆகவே இந்த ச்லோகம் துஷ்டமானுலுங்கூட பாதகமில்லையென்றும் இவர்கள் எழுதுவது இவர்களுக்கே தகும். மஹான்களின் திருவாக்குக்களிலேயே ஒன்றிரண்டு பிழைகள் இருந்தால் நமது வாக்குக்களில் நூற்றுக்கணக்காகவேயிருக்கலாமென்று அவரவர்கள் வாய்வந்தபடி கவி பண்ணலாம் போலும்.

31. சுலோகம் துஷ்டமானுலென்ன? அதனுல் ராமாநுஜபாத்ரத்தனியன் நவீனமாய்விடுமோ ? என்கிருர். இத்தனியன் நவீனமென்பது வேறு பலபல காரணங்களால் நிரூபிக்கப்பட்டேயிருக்கிறது. கல்யப்தேஷு இத்யாதிச்லோகத்தைக்கொண்டு இதன் உத்பத்திகாலத்தை நிர்ணயிக்கலாமென்று சொன்னவர்களை நோக்கி 'அந்த ச்லோகமே தப்பாதலால் அதுவும் விவேகிகள் செய்ததன்று' என்று எழுதப்பட்டது. இது மிகவும் யுக்தமே. ஸ்ரீதேசிகருடைய அவதாரம், ஸ்ரீமாந் வேங்கடதனியன் அவதாரம், பாதுகாஸஹஸ்ராதிப்ரபந்தாவதாரம் ஆகிய இவைகளைப்பற்றி ஒரு ச்லோகமும் காணுதிருக்கையில் ஸுப்ரஸித்தமாய் விவாதத்திற்கு ஆஸ்பதமான இந்தத் தனியனுக்கு ஒரு ஜாதக ச்லோகம் காணப்படுமானுல் இந்த ஒன்றைக்கொண்டே இந்த பாத்ரத்தனியனுடைய தத்வத்தை நன்கு தெரிந்துகொள்ளலாமே. அண்ணுஸ்வாமியின் க்ரந்தங்கள் ஒருபுறமிருக்கட்டும். அவர் காட்டும் ப்ரமாணயுக்திகள் பொருத்தமற்றவைகளாகவேயிருக்கட்டும். கல்யப்தேஷு என்கிற இந்த ச்லோகமொன்று போருமே இத்தனியன் நவீனமென்பதை நன்கு ஸ்தாபிக்க. எவ்விதமாக ஸ்தாபிக்கின்றதென்னில்; இத்தனியனை மிகவும் பழையதாகக் காட்டிக்கொள்ள அதிமாத்ரம் ப்ரயாஸப்பட்டிருக்கிருர்களென்பதை வ்யக்தமாகக் காட்டி ஸ்தாபிக்கின்றது. சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையார் ஸ்ரீதேசிகருடைய தத்வடீகா க்ரந்தத்தை இப்போது தேவநாகரி லிபியில் அச்சிட்டு வெளியிட்டிருக்கிருர்களல்லவா? அதில் ஸ்ரீமதஹோபில

மடம் (வர்த்தமாந) அழகியசிங்கர் ஜீயர்ஸ்வாமிகள் ஒரு பூமிகை யருளியுள்ளார். அதில் தேசிகருடைய அவதார காலத்தைப்பற்றி யெழுதி வருகையில் விபவஹூ, சுக்லஹூ என இரண்டையும் காட்டி அபிப்ராயபேதமிருப்பதை விவரித்துள்ளார். நிர்ணயக மான ப்ரமாணமொன்றும் அந்த ஸ்வாமிக்குக் கிடைக்கவில்லை யென்கிற நிர்வேதம் தெரியவருகிறது. தேசிகனுடைய அவதார கால நிர்ணயமே துஷ்கரமாயிருக்கும்போது, விவாதத்தனியனொன் றுக்கு ஜாதக ச்லோகம் காணப்படுமானால், அது அபத்தமாயுமிருந் தால், இங்கு விவேகிகள் தெரிந்துகொள்ளவேண்டியது என்ன? இவ்விஷயத்திற்குச் சார்பாகப் பல உதாரணங்களுண்டு; அவை அவசியமானபோது காட்டப்படும்.

32. இத்தனியன் விஷயமாக அண்ணுஸ்வாமி ஓலைப்புத்தகங் களை ஆராய்ச்சிசெய்தது மிகவும் வீண்என்று எழுதுகிறார்கள். ரஹஸ் யத்ரயஸாரம் முதலானவற்றில் ஸ்ரீமாந் வேங்கடதனியனே இருக்க வுரியதென்றும், பகவத் விஷயத்திற்கு மாத்திரமே ராமாநுஜபாத் ரத்தனியனுகையாலே பகவத் விஷய ஸ்ரீகோசங்களில் இத்தனி யனேயுள்ளதென்றும் எழுதுகிறார்கள். "ஸம்ஸ்க்ருத க்ரந்த கால க்ஷேபத்திற்கு ஸ்ரீமாந் வேங்கடதனியனைக் கொள்ளுங்கள்; த்ரா விட க்ரந்த காலக்ஷேபத்திற்கு பாத்ரத்தனியனைக் கொள்ளுங்கள்" என்று தேசிகனே நியமித்தருளினதாக வைபவப்ரகாசிகைகளில் அச்சிட்டிருப்பது அபலபிக்கமுடியாதது. ரஹஸ்யங்களெல்லாம்த்ரா விட க்ரந்தங்களேயாதலால் அவற்றுக்கு பாத்ரத்தனியனே ப்ராப்த மாகத் தேறுகின்றது. ஆகவேதான் வ்யபதிஷ்டர்களாய் ஸம்ப்ர தாயப்ரவர்த்தகர்களான ஸ்ரீ கோஷ்டீபுரம் ஸ்வாமி, சேட்லூர்ஸ்வாமி முதலானோர் சோதித்துப் பதிப்பித்துள்ள ரஹஸ்யங்களில் பாத் ரத்தனியன் புகுந்திருக்கின்றது. பகவத் விஷயத்திற்கு மாத்திரமே தேசிகநியமனம் என்றால் மேலேகாட்டிய இப்பதிப்புக்கள் பழிக்கப் படவேண்டிவரும். ஆதலால், தேசிகப்ரணீதமான ஒரு ரஹஸ் யத்திலும் ஒரு தமிழ்ப் பிரபந்தத்திலும் ஓலையேடுகளில் இப் பாத்ரத்தனியன் புகவில்லையென்பதை அண்ணுஸ்வாமி நிரூபித் தது மிகவும் யுக்தமே.

33. இப்போது இவர்கள் எழுதுகிறபடி பகவத்விஷயத்திற்கு மாத்திரமே ராமாநுஜபாத்ரத்தனியன் தேசிக திவ்யாஜ்ஞாப்ராப்தம் என்றே வைத்துக்கொள்வோம். ஸ்ரீமாந்வேங்கடதனியன் அற்றதும் ராமாநுஜபாத்ரத்தனியன் உற்றதுமான ஒரு பகவத் விஷய ஸ்ரீகோசத்தையும் ஓலை யேடாக இப்பிறப்பில் இவர்களால் காட்டமுடியாதென்பது நிஸ்ஸந்தேஹமே. இதைப்பற்றி ஓலை ஸ்ரீகோசம் தேடவேண்டிய ப்ரயாஸமும் வேண்டா. ஸ்ரீரங்கம் ஆண்டவன் ஸ்வாமி அச்சிட்டு வெளியிட்டிருக்கின்ற தனியன் புஸ்தகத்தில் “பகவத்விஷயத்தனியன்கள்” என்கிற மகுடத்தின்கீழ் ஸ்ரீமாந் வேங்கடதனியனையே பிரசுரித்திருக்கிறார் என்பதை முன்னமே நன்கு நிரூபித்திருக்க அதைப்பற்றி வாய்திறவாமல் வீண் கதைகளை யெழுதுவதில் என்ன பயன்? “கோவில்களில் பிரதியாகக் கூசல்போடுங் காலங்களில் ராமானுஜபாத்ரத்தனியனைத்தான் சொல்லுகிறோம்; ஸ்ரீமாந்வேங்கடத்தனியனைச் சொல்லுவதில்லை” என்று இவ்வளவுமட்டுமே இவர்கள் சொல்லத்தகும். இதில் யாருக்கும் ஆக்ஷேபமில்லை. இது காலக்ஷேபக்ரந்தங்களுக்கும் தனியன் என்கிற பேச்சு ஸ்வகோஷ்டியிலும் விலைச்செல்ல மாட்டாததே.

34. “திவ்யதேசங்களைப் பறிகொடுத்தது யார். கை பலத்தாலும் த்ரவ்யபலத்தாலும் மநுஷ்யக்கட்டாலும் வஞ்சித்துப்பல திவ்யதேசங்களைக் களவுகொண்டது யார்” என்று கேட்கிறார்கள். நம்முடைய ஆழ்வார்களும் ஆசார்யர்களும்” என்றுதான் இதற்கு பதில் சொல்லவேண்டும். பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் * ஜிதபாஹ்யஜிநாதி * என்ற ச்லோகத்தில் **மணிமண்டபவப்ரகணுந்விததே** **பரகாலகவி:** என்று, கோயிலில் திருமங்கையாழ்வார் பல திருமண்டபங்களையும்திருமதிள்களையும் கட்டுவித்தருளினதாக அருளிச்செய்துள்ளார். அந்த ப்ராகார மண்டபாதிகளில் அதிப்ராசீனமென்று யாவரும் மதிக்கக்கூடிய திருமண்காப்புகள் விளங்குவது அபரோக்ஷம். இதற்குப் பிரதியான திருமண்காப்பு ஜம்பூத்வீபே பாரதவர்ஷே பரதகண்டே மேரோர்தக்ஷிணே பார்ச்வே ஒரு இடத்திலும் ஒன்றுகூட காட்டமுடியாதென்பதை அவரவர்தம் உள்ளம் அறிந்தேயுள்ளது. இதைப்பற்றின விரிவு இப்போது அநபேக்ஷி

தம். வடகலைத் திருமண்களையெல்லாம் திருமங்கையாழ்வார் அழித்தும் மாற்றியும் கோயிலை ஆக்ரமித்துவிட்டார் என்று இவர்கள் கருதுகின்ற விஷயத்தில் நம்மால் என்ன பதில் எழுதமுடியும்? இது மிகவும் அதீந்த்ரியமான விஷயம். திருமங்கையாழ்வார் காலத்திற்குமுன்னே திவ்ய தேசங்களெல்லாம் வடகலையாகவேயிருந்ததாயும், அவ்வாழ்வாரும், பிறகு அவரைப்பின்பற்றிய ஆசாரியர்களும் அதை யெல்லாம் மாற்றி வேறுவிதமாக்கி ஆக்ரமித்துவிட்டு, இவர்களைக் கோவில்களில் நின்றும் குளக்கரைகளுக்குத் துரத்திவிட்டதாகவும் இவர்கள் அபிப்ராயப்படுவது உண்மையோ தவறோ, அதை நாம் ஆராய்ச்சி செய்ய அநர்ஹரே. பண்டைக்காலத்துச் சரித்திர ஆராய்ச்சியாளர்களிடம் இதை விட்டுவிடுவோம். ஸகல ஆழ்வார்களுடைய திருவவதாரஸ்தலங்களும் ஸகல ஆசார்யர்களுடைய திருவவதார ஸ்தலங்களும் எப்போது தென்கலையாயிற்று என்கிற விசாரத்தையும், கோயில்முதலிய திவ்யதேசங்களில் உடையவர் காலந்தொட்டு ஸ்தலாசார்ய புருஷர்களாக விளங்கி ப்ரபல மரியாதைகள் பெற்றுவருகின்ற பெரியநம்பி ஆழ்வான் ஆண்டான் எம்பார் அனந்தாழ்வான் முதலிய ஆசார்யர்களின் வம்ஶஸ்தர்கள் எத்தனைகாலமாகத் தென்கலையார்கள் என்கிற விசாரத்தையும், திவ்யதேச கைங்கர்ய நிர்வாஹகர்களாக ஆங்காங்கு நியமிக்கப்பட்டுள்ள ஜீயர்களெல்லாரும் தென்கலையார்களாகவே யிருக்கும்படி நியமித்தது யார் என்கிற விசாரத்தையும், இத்தகைய மற்றும் பல விசாரங்களையும் தடஸ்தர்களான விமர்ஶகாரர்களிடத்திலேயே விட்டுவிடுவோம். இவ்விஷயங்களில் வாதிப்ரதிவாதிகளே ஸ்வச்சந்தமாகச் சொல்லிக்கொண்டிருப்பது பயன்படுமோ?

35. கைபலம், த்ரவ்யபலம், மநுஷ்யபலம் ஆகிய மூன்றாலே வஞ்சித்துக் களவு கொண்டதாக இவர்கள் எழுதியிருப்பது மிகவும் உண்மையானதே. இதில் எள்ளளவும் பொய் இல்லை. இம்மூன்று வலுமும் "மாடமாளிகைசூழ் திருமங்கைமன்னன் ஒன்றலர் தங்களை வெல்லும் ஆடல் மாவலவன் கலிகன்றி" எனப்பட்ட திருமங்கையாழ்வாரொருவர்க்கே இருந்ததாக உபயகலையாரும் இசைந்த விஷயம். கோவில்களை அதிகமாக ஆக்ரமித்தவரும் வஞ்சனைகளும்

களவுகளும் செய்தவரும் அவரே யென்பது ஸுப்ரஸித்தம். ஆங்காங்குப் பல பேர்களை வெருட்டியோட்டினவரும் அவரே யென்பதும் மறுக்கவொண்ணாதது. இவர் தென்கலைத் தலைவர் என்பதும் நிர்விவாதம். இப்படிப்பட்ட இவர் "ஒன்றலர்தங்களை வெல்லும்" என்று தாமே அருளிச் செய்துள்ளபடி இவ்வொன்றலர்களை வெருட்டியோட்டி திவ்ய தேசங்களை ஆக்ரமித்துக் கொண்டது அனேகமாய் வாஸ்தவமாகவேயிருக்கலாமென்று எமக்கும் தோன்றுகிறது. தேசிகன் இவரைப்பற்றி யருளிச்செய்யும்போது "வையமெல்லாம் மறைவிளங்க வாள்வேலேந்தும் மங்கையர்கோன்" என்றருளிச் செய்ததும் இவ்விஷயங்களை யெல்லாம் திருவுள்ளம்பற்றித் தானே என்றும் எண்ணலாகிறது. நீர்மேல் நடப்பான் நிழலிலொதுங்குவான் தாளூதுவான் தோலாவழக்கன் இத்யாதிமநுஷ்யக் கட்டும் அவ்வாழ்வாருக்கு இருந்ததனால் அவரே இவர்களை வஞ்சித்துக் கோவில்களைக் களவு கொண்டதாக இவர்கள் கருதுவது மிகவும் யுக்தம் என்று நிச்சயிக்கலாம்போலே தோன்றுகிறது. இது நிற்க.

36. ஸ்ரீரங்கநாதன் தேசிகரிடத்தில் மிகவும் மோஹங் கொண்டவர் என்றெழுதுகிறார்கள். இதில் யாருக்கு என்ன ஸந்தேஹம். இதை மறுக்கும் ஸ்ரீ வைஷ்ணவர் ஒருவருமில்லை. ஒவ்வொரு அடியவர்பக்கலிலே ஒவ்வொருவிதமாக வியாமோஹம் கொள்ளுகின்ற ஸ்ரீரங்கநாதன் ஒவ்வொருவர்க்கு ஒவ்வொருவிதமான சிறப்பைத் தந்தருள்கின்றான்.

தேசிகன் தயாசதகத்தில் "[illegible] ஸ்ருஷ்டி" என்றருளிச் செய்தபடி எம்பெருமானுடைய வியாமோஹத்திற்குக் கொள்கலமானவர்கள் [illegible] பலருளரே. ஒவ்வொருவர் திறத்திலே ஒவ்வொருவகையான பரிமாற்றமன்றோ செய்தருளிற்று. அதுபோலவே அர்ச்சாவதாரத்திலுமென்றுணர்க. எம்பெருமானார் பக்கலிலே வியாமோஹங்கொண்டு அவர்க்குச் செய்த சிறப்பு ஒருவிதம். பட்டர் பக்கலிலே வியாமோஹித்துச்

செய்த சிறப்பு வேறொருவிதம். நம்பிள்ளை திறத்தில் மயல் கொண்டு செய்த சிறப்பு இன்னொருவிதம். தேசிகன் திறத்திலே வியாமோஹித்து அருள்புரிந்தது பிறிதொருவிதம். மணவாள மாமுனிகள் பக்கலிலே வியாமோஹித்துச் செய்தருளினது எங்குங் கண்டவொருவிதம். இவ்வளவே ஸாரதமமான வார்த்தை.

37. விச்வகுணதர்ச ச்லோகார்த்தத்தைப் பற்றி வைஜயந்தீ பத்ரிகை விரியவுரைத்திருக்கின்றது. அதுதானும் மிகையென்னலாம்படி மாஜி ஜட்ஜ் வி. வி. ஸ்ரீஸ்வாமியே சுதேசமித்திரனில் வியாக்கியானம் வெகு அழகாக வெளியிட்டிருப்பதும் ப்ரஸித்தம். ஆகவே இனி இதில் நூல் விரிவு வேண்டா. "நாங்களும் அருளிச் செயலில் உண்மையான ஊற்றமுடையோம்" என்று [illegible]மாகச் சொல்லிக்கொள்பவர்களை ஆதரவுடன் வரவேற்கக் காத்திருக்கிறோம்.

38. "தயாபாத்ரம் தேசிகனுக்கே பொருந்தும், மணவாள மாமுனிகளுக்குப் பொருந்தாதென்பதைக் காட்டுகிறோம்" என்று தொடங்கி, உபாயாநுஷ்டானமென்றும் பரஸமர்ப்பணமென்றும் எழுதியுள்ள சில வார்த்தைகள் தேசிகர் திருவுள்ளத்தை மிகவும் புண்படுத்துவனவாகும். இவ்விஷயம் அண்ணாஸ்வாமியின் அத்ருஷ்டார்த்த ஸர்வஸ்வமென்னும் க்ரந்தத்தினால் ஸுவிசதமாகுமாதலால் இங்கு விவரிக்கின்றிலோம்.

39. கேசவார்யக்ருபாபாத்ரம் என்பதைப்பற்றி யெழுதியிருப்பது மிகவும் விபரீதம். "ப்ரபத்யே நிரவத்யாநாம்" என்கிற தனியனை முநித்ரயத்தாரும் "கேசவார்யக்ருபாபாத்ரம்" என்கிற தனியனை மடத்தாரும் ஸமாச்ரயணபரம்பரையில் வைத்துக்கொண்டார்கள் என்றெழுதியிருப்பது ஒரு ஸம்ப்ரதாயத்தையும் அடியோடு அறியாமையைக்காட்டுகின்றது. கேசவார்யக்ருபாபாத்ரமென்பது ஒருவருடைய ஸமாச்ரயண பரம்பரையிலும் இன்றளவும் அநுஸந்தானத்தில் கிடையாது ப்ரபத்யே நிரவத்யாநாம் என்கிற தனியன் ஒன்றேயுள்ளது. கேசவார்யதனியனை ராமாநுஜபாத்ரத்தனியன் போலவே கோஷிப்பதற்கு மாத்திரமே வைத்துக்கொண்டிருக்கி

ருர்களென்பது ஒருநாளும் மறைக்கமுடியாதது. மடத்தார்கள் ராமானுஜபாத்ரத்திற்கு முன்னே கேசவார்ய பாத்ரத்தைச்சொல்லி வருவதைக்கொண்டு நிரூபிக்கப்பட்டுள்ள தத்துவத்திற்கு ஒரு விடையுமில்லையே.

40. இன்னார் சிஷ்யர் இன்னாரென்று ஆதிமுதல் தனியன் களில் சொல்லிவந்திருப்பதாக இவர்கள் எழுதியிருப்பதும் பிசகு. ஒன்றிரண்டு தனியன்களில் மாத்திரமே ஆசார்யநாமநிர்த்தேச முள் ளது. அஃதில்லாத தனியன்களே அதிகம். இவ்விசாரங்களெல் லாம் ப்ராக்ருதவிஷயத்திற்கு அநுபயுக்தங்கள். தத்வ, விஜயத் வஜங்களில் இன்னது கூறப்படுகிறது என்பதைச் சிறிதும் கவனி யாமலே எழுதியுள்ள விஷயங்களில் விசாரம் வீண்.

41. வடகலையார்களுக்கே மஹாமஹோபாத்யாய பட்டமும் ஹைகோர்ட்டு ஜட்ஜ் பதவியும் கிடைத்திருப்பதாகக் காட்டியெழுதி யதும் பிசகு. விசாகபட்டணம் பரவஸ்து ரங்காசாரியர், மல்லேச் வரம் R. நரஸிம்ஹாசாரியர் முதலான தென்கலை வித்வான்கள் ம. ம. பட்டம் பெற்றவர்கள் மஹாபாரத மொழிபெயர்ப்பாசிரிய ராகிய ம. வீ. ராமானுஜாசாரியர் ஸ்வாமி மஹாமஹோபாத்யாய பிருதபூஷிதராய் விளங்கி வருகிறார். இந்த மதுரையில் நெடுநாள் சேர்மெனாக இருந்த ஸ்ரீ உ. வே. வி. ஸ்ரீநிவாஸாசாரியருடைய திருத்தம்பியார் வி. பாஷியம் ஐயங்கார் ஹைகோர்ட்டு ஜட்ஜ் பதவி வஹித்தவர் நாளைக்கும் சென்னையில் விளங்குகின்றார். அநாவச்யக விஷயங்களால் க்ரந்தபூரணம் ஏனோ? நியாயஸ்தலத் தீர்ப்புகளைக் கொண்டே ஸ்ரீசைலேசதயாபாத்ரத்தின் சிறப்பை யாரும் ஸ்தா பிக்கவில்லை. பல சான்றுகளினிடையே அதுவும் ஒரு சான்று. நீதி ஸ்தலத் தீர்ப்புகளில் விபரீதங்களும் விளைவதுண்டு. அதற்குத் திருநறையூர் முதலான திருப்பதிகளும் உதாஹரணபூமியாயிருக் கின்றன.

42. பரமார்த்த ஸ்துதியில் **புஜகேந்த்ர** என்னும் ச்லோகத்தில் அநுஜ்ஞா கைங்கர்ய நிஷ்டையை தேசிகன் பிரார்த்தித்திருப்பது முக்திதசா விஷயம் என்று ஒதுக்குவது மிக அழகியது. அர்ச்சா

வதாராநுபவம் முதலியன எல்லாமும் இவர்கட்கு முக்திதசையி லேயே ஆகுமத்தனைபோலும். அர்ச்சாவதாரவைதேசிகத்வமே இவர்களுக்கு ஸ்திரீக்ருதமாயிற்று.

43. தேசிகனுடைய ந்யாஸவிம்சதி க்ரந்தத்திலிருந்து ஒரு ச்லோகத்தைப் பிள்ளைலோகாசார்யர் தமது ரஹஸ்யத்தில் உதா ஹரித்திருப்பதாகவும், அதை அண்ணுஸ்வாமி இல்லை செய்யப் பாடுபடுவதாகவும் ஒரு விஷயம் எழுதப்பட்டுளது. பொய்யுரை களிலோ அல்லது விபரீதஜ்ஞானத்திலோ தேர்ந்தவர் இவரேயென் பது இதனால் நன்கு விளங்குகிறது. ந்யாஸவிம்ஶதியிலிருந்து ஒரு ச்லோகத்தை முமுக்ஷுப்படி வியாக்கியானத்தில் மணவாள மாமுனிகள் உதாஹரித்திருக்கிறார். பிள்ளைலோகாசார்யர் உதா ஹரிக்கவில்லை. உதாஹரித்ததாக ப்ரஸ்தாவந்தானுமில்லை. மண வாளமாமுனிகள் உதாஹரித்திருப்பதை யாரும் இல்லை செய்ய வில்லை. அண்ணுஸ்வாமியே அவ்விடத்தை மிக விரிவாக வியாக்கி யானித்துள்ளார். ந்யாஸவிம்சதியிலிருந்து எந்த ச்லோகத்தைப் பிள்ளைலோகாசார்யர் உதாஹரித்திருக்கிறாரென்பதை மாத்திரமா வது இவர் நிரூபிப்பாரானால் இவர் எழுதுவதெல்லாம் பரமப்ரமாண மென்று இசையத் தடையே கிடையாது. எதையோ நினைத்து யாரையோ அடித்த கதையாக இருக்கிறது.

44. அண்ணுஸ்வாமி இதுவரையில் 150 க்ரந்தங்கள் அருளி யிருக்கிறாரென்னும் விஷயத்தில் பொறாமை தூண்டி ஏதோ எழுது கிறார்கள். அண்ணுஸ்வாமியின் க்ரந்தங்கள் பலவகைகளில் அவ தரித்திருக்கின்றன. ஆழ்வார் திவ்யஸூக்திகளுக்கு விபுலமான வியாக்கியானங்கள், ஆசார்ய திவ்யஸூக்திகளுக்கு விசதமான வியாக்கியானங்கள், ரஹஸ்யார்த்தங்களுக்கு விவரணங்கள், சாஸ்த் ரார்த்த விசதீகரணங்கள், வேதலக்ஷண விமர்ஶங்கள்—என்றிப் படிப்பட்ட பலவகைகளாக வெளிவந்திருக்கின்ற அவருடைய க்ரந் தங்களில் ஸம்ப்ரதாயார்த்த வாதவிவாதபரங்களான சில க்ரந்தங் களில் இவர்கள் வருத்தப்பட அவசியமிருக்கின்றதென்று வைத் துக்கொண்டாலும், ஸகல ஸ்ரீவைஷ்ணவ வுலகமும் சிரஸாவஹிக்க

171206

வேண்டிய க்ரந்தங்கள் நூற்றுக்கு மேற்படவே அண்ணாஸ்வாமியா லருளிச்செய்யப்பட்டவை உள்ளன. அவற்றினுடைய பெருமை களை ஸ்ரீ. கபிஸ்தலம் ஸ்வாமி, லக்ஷ்மீபுரம் ஸ்வாமி போல்வாரான மஹாமஹோபாத்யாயர்களும், செந்தமிழ், வேதாந்த தீபிகை, உத் யாநபத்ரிகை, ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திஸம்ரக்ஷிணீ முதலான பத்ரிகை களின் ஆசிரியர்களும், மற்றும் பல மதாந்தர வித்வன்மணிகளும் கொண்டாடி ப்ரசஸ்தி பத்ரிகைகள் வெளியிட்டிருக்கிறார்களென் பதை யாரும் மறைக்க முடியாதே.

922

45. இப்படி உலகம் புகழ நிற்கும் க்ரந்தங்களைச் சிலர் இழி வாகக் கூறினால் என்ன குறை? பூர்வாசார்ய க்ரந்தங்களே பொறா மையாளர்களின் வாயில் அகப்பட்டுக்கொண்டு பரிதபிக்கும்போது இவ்விஷயத்தில் கேட்கவேணுமோ? ப்ரஹ்மவ்யாப்தி பரிஷ்க்ரியா, ஸமஸ்யமாநோக்தி ஸௌஷ்டவ விமர்சம் முதலான அண்ணாஸ்வாமி யின் க்ரந்தங்கள் அதிகரணஸாராவளியும் தத்வமுக்தா கலாபமும் போலே விளங்குகின்றன என்று ஸம்ப்ரதாயாந்தரஸ்தர்களான உத்தமாச்ரமிகளாலும் கொண்டாடப்பட்டிருக்கின்றன வென்பது ஜகத்ப்ரஸித்தம். இப்படியிருக்க, அஸூயாபரவசர்களின் பேச்சைப் பொருள்படுத்தி இங்கு நாம் விடையளிப்பது வீண்.

46. அண்ணாஸ்வாமியின் க்ரந்தங்களில் வசை மொழிகள் விளங்குவதாக எழுதுகிறார். அப்படியே வைத்துக்கொள்வோம். ஒரு சிறுவிஷயத்தை இவர்கள் ஆலோசிக்கவேணும். ஸ்ரீ தேசிக ருடைய க்ரந்தங்களுள் மிகச்சிறந்ததாகக் கொண்டாடப்படுகின்ற ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் "த்ருடபூர்வச்ருதோ மூர்க்க: தர்மா ஞ்ஞம் அவிசாரத:, அந்த:....அந்யதா மந்தபுத்தீநாம் ப்ரதிபாதி துராத்மநாம். குதர்க்கவ்யாள தஷ்டாநாம் விப்ராந்தேந்த்ரியவாஜிநாம்" என்று இப்படிப் பட்ட திருவாசகங்கள் எடுத்தாளப்பட்டிருக்கின்றனவாகக்கொண்டு நீங்கள் காலக்ஷேபம் செய்து வருகிறீர்கள். இப்படிப்பட்ட கடுஞ் சொற்களை ஸ்ரீதேசிகர் பரமபவித்ரக்ரந்தத்தில் ஒரு நாளும் சேர்த் திருக்கமாட்டாரென்றும், இவை ப்ரக்ஷிப்தங்கள் என்றும் பிராமாணி கர்கள் பகர்ந்தாலும் இசையாமல் இவையும் தேசிகன் இட்டருளின

வையே என்கிறீர்கள். மேற்குறித்த வாசகங்கள் வசை மொழிகளோ? இசைமொழிகளோ? வசைமொழிகளல்லவென்று கூற ஒரு விவேகியாவது முன் வரமுடியுமோ? இவற்றிற்காட்டிலும் கொடிய வசை மொழிகள் உலகில் இருப்பதாக எண்ணவிரகில்லை. இனி, அண்ணாஸ்வாமியின் க்ரந்தங்களில் வசைமொழிகள் உள்ளனவென்றால் என்ன வியப்பு? என்ன வெறுப்பு? ஸ்வபாவஸ்ஸ்ரவம் போலும் என்று கொள்ளலாமே.

47. மற்றொரு முக்கிய விஷயம் கேண்மின். தேசிகன் விஷயமான தோத்திரங்களில் தலையானதென்று கொண்டாடப்படுகிற ரத்னமாலிகையில்—“ஹந்த ஹந்த! ராக்ஷேஷ உத்தேஷணாஸயாயி ஸந்தி கிந்நு விதுர்தே வேதூர்யராவணாதிஶிசுபாலினாம்” என்கிற சுலோகத்தை ஸாரதமமாகக்கொண்டு ப்ரளயமாக உத்கோஷித்து வருகிறீர்கள். இந்த ச்லோகத்தால் ஏற்படுவதென்ன? ஸ்ரீராமபிரானைப் பழிக்க இராவணன் பிறந்ததுபோலவும், கண்ணபிரானைப் பழிக்க சிசுபாலாதிகள் பிறந்ததுபோலவும் ஸ்ரீதேசிகனைப் பழிக்கவும் சில பாபிகள் பிறந்திருக்கிறார்களென்றும் அதில் வியப்பில்லையென்றும் இதில் ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறதல்லவா? தேசிகன் எழுந்தருளியிருந்த காலத்திலேயே அவருடைய ஒப்புயர்வற்ற பெருமைகளைக் கண்ணாரக்கண்டுவைத்தும் பொறாமையாலே பலர் அவரை தூஷிக்கப்பிறந்தார்கள் என்று சொல்லியிருக்கும்போது, அண்ணாஸ்வாமியைப்பற்றிச் சிலரோ பலரோ தூஷித்தார்கள், தூஷிக்கிறார்கள், தூஷிக்கப்போகிறார்கள் என்றால் இதில் ஏதேனும் ஆச்சரியமுண்டோ? ஸ்ரீராமக்ருஷ்ணாதிகளோடொக்கவும் ஸ்ரீதேசிகனோடொக்கவும் அண்ணாஸ்வாமிக்கும் ஒரு சீரிய சிங்காசனம் கிடைத்தது என்பதன்றோ தேறுகின்றது. தேசிகாதிகள் பெறாத தூஷணைகளை அண்ணாஸ்வாமி பெற்றிருக்கிறாரோ? இவ்விஷயத்தைப் பரமக்ருபையுடன் நிரூபகர்கள் ஆராயவேண்டும். கனிகள் நிறைந்த மரத்திலே கல்லடி விழுகிற கணக்கிலே தேசிகாதிகளை தூஷித்தவர்களுடைய குலத்தவர்கள் அண்ணாஸ்வாமியையும் தூஷித்திருந்தால் அதைப் பேரானந்தமாக உதாஹரிக்கின்ற இப்பெருந்தகையாளர், தேசிகர் பெற்ற தூஷணைகளுக்கும் உள்ளுற

உகப்பர்போலும். "மே ராஜாதாஸம் சரணம் ப்ரபத்யே" என்றே இவர்களுக்கு நித்யாநுஸந்தானமாயிடுக.

48. ஈடு முதலான க்ரந்தங்களில் அண்ணஸ்வாமி பாடத்தைத் திருத்துகிறுரென்று எழுதப்பட்டிருக்கிறது. எத்தனேயோ க்ரந்தங்களில் எத்தனேயோ வகையான பிழைகள் **லேகக வ்யாமோஹாதி நிபந்தநமாகப்** புகுந்திருக்கின்றனவென்பதை ஒவ்வொருவரும் இசைந்தேதீரவேணும். அடியோடு திருத்தவேண்டாத ஓலைப் புத்தகமோ அச்சுப்புத்தகமோ ஒன்றுகூட ஒருவரால் காட்டமுடியாதென்பதில் யாருக்கேனும் விப்ரதிபத்தியுண்டோ? எந்த இடங்களில் எவ்விதமாகத் திருத்தப்படுகிறதோ அவ்விதமான திருத்தம் அவ்விடத்திற்கு யுக்தமா அயுக்தமா என்பதை விமர்சிக்கவேண்டியது நியாயமே. இந்த விமர்சம் வித்வான்கள் செய்யவேண்டியதேயல்லது தூஷகர் செய்யத்தக்கதன்று. அண்ணஸ்வாமியின் திருத்தங்களெல்லாம் பொன்னேபோல் போற்றத்தக்கவையென்று உபய கலேயிலும் பலபல வித்வச்சிகாமணிகள் அநேக ப்ரசஸ்தி பத்ரிகா மூலமாய் ப்ரகடனம் செய்திருக்கும்போது இந்த அநாமதேய தூஷகர் வயிறு பிடிப்பதில் பலன் என்னே ?

## நிகமனம்.

பூர்வபக்ஷியின் பத்ரிகையில் சில விஷயங்கள் ஸாஹஸமாகவும் ஸ்வதந்த்ரமாகவும் நிர்மூலமாகவும் எழுதப்பட்டிருக்கின்றனவென்பதை ப்ராமாணிகர்களுக்குச் சுருக்கமாக எடுத்துக்காட்டுகின்றேன்.

49. ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமி இருகலேயார்க்கும் ஆசார்யர் என்றெழுதியுள்ளார். ஒரு கலேயார்க்கும் அவர் ஆசாரியரல்லர் என்பது உண்மை. ஸ்ரீதேசிகரிடத்தில் அவர் ஆச்ரயித்தவரே. அவரிடத்தில் ஆச்ரயித்தவர் ஒருவருமில்லே. த்விதீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாமி என்றும், த்ருதீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமியென்றும் சிலர் எழுதிக்கொள்வது ஸமீபகாலத்திலிருந்து கல்பனேயாகவே வருவதாம். மைஸூரில் இப்போதுள்ள பரகால

மடம் 120 வருஷங்களுக்கு முன் இருந்ததில்லையென்றும் 100 வருஷங்களுக்குமுன் நூதனமாகவே ஏற்பட்டதென்றும் மைஸூர் கவர்ன்மெண்ட் ஹிஸ்ட்ரியினுல் அனைவரும் எளிதாக அறிவர். அப்புத்தகம் அச்சிடப்பட்டேயிருக்கிறது. இதைப்பற்றின ஆராய்ச்சிகள் மஹான்களால் விரைவில் வெளிவரும்.

50. "பிள்ளைலோகாசாரியர் ஸ்ரீதேசிகரிடத்தில் க்ரந்தம் ஸேவித்து சிஷ்யராக இருந்தவர்" என்று எழுதப்படுகிறது. இதனை மாற்றிச்சொல்லி அதுதான் உண்மை என்பவர்களுமுள்ளார்கள். பிரமாணங்கொண்டு நிஷ்கர்ஷிப்பதே அழகியது. "சீரொன்று தூப்புல்" என்கிற தனியன் பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்தாரென்பது பரமார்த்தமாக இருக்குமானுல் தேசிகரே ஸ்ரீலோகாசார்யருடைய சிஷ்யராக இருக்கவேணும் என்று அண்ணுஸ்வாமியின் க்ரந்தங்களில் விரிவாக நிரூபிக்கப்பட்டு, அது புதுக்கோட்டை காலேஜ் ப்ரொபஸர். ஸ்ரீநிவாஸராகவாசாரியர் M. A. அவர்களாலும் ஆமோதிக்கப்பட்டுளதென்னுமிடம் வைஜயந்தீ பத்ரிகையில் விசதம்.

51. பெரியஜீயர் என்கிற திருநாமம் நஞ்சீயர்க்கு முண்டென்பது அண்ணுஸ்வாமியின் பாத்ரதத்வ க்ரந்தத்திலும் காட்டப்பட்டேயிருக்கின்றது. ஸர்வதேச தசாகாலேஷு என்கிற சுலோகம் அருளிச்செய்த பெரியஜீயர் நஞ்சீயரல்லர் என்பது உபயகலையாருடைய க்ரந்தங்களாலும் வ்யக்தம். இந்த ச்லோகத்தையே சில வடகலையார்கள் திருக்குருகைப்பிரான்பிள்ளான் பணித்ததாகப் பதிப்பித்துள்ளாகள். பெரியஜீயரருளிச்செய்த தென்பதை எந்த எண்ணத்தினுல் அவர்கள் மாற்றினுர்களென்பதை விமர்சித்தல் நன்று. ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா என்கிற ச்லோக மருளிச்செய்த கந்தாடையண்ணன் "பெரியஜீயருடைய சிஷ்யரான கந்தாடையண்ணன்" என்கிற ஓலை ஸ்ரீகோச ப்ரஸித்தியினுல் நன்கு நிஷ்கர்ஷிக்கத் தகுந்தவர்.

52. மேற்குறித்த இரண்டு ச்லோகங்களையும் ஆர்த்திப்பிரபந்தத்தில் மணவாளமாமுனிகள் அருளிச்செய்திருப்பதாகக்கொண்டு ஏதோ எழுதப்பட்டுளது. இது நிர்மூலப்ரமம். ஆர்த்திப்பிரபந்தம்

முழுவதும் தமிழ்ப் பாசுரங்கள். அதில் ஒரு ச்லோகமும் கிடையாது. ஸர்வாத்மனா அஸ்தானங்களில் பிரமிப்பதே.

53. "ஆதிவண்சடகோப மஹாதேசிகன் இரண்டு பரம்பரைகளில் ஆசார்யனாகவருவதையொட்டி இரண்டு தனியன்கள்இருந்தே தீரவேண்டும்" என்றதும் பொருத்தமற்றது. பல ஆசார்யர்கள் பல பரம்பரைகளில் ஆசிரியர்களாக வருவது ஸுப்ரஸித்தம். அவர்களுக்குத் தனியன் பேதிக்கவில்லையென்பதும் ப்ரஸித்தம். கேசவார்ய க்ருபாபாத்ர மென்கிற தனியன் ஒரு வகுப்பினராலும் ஸமாச்ரயண பரம்பரையிலும் க்ரந்த பரம்பரையிலும் அநுஸந்திக்கப்படுவது கிடையாதென்பதும் சிலகாலமாய்ச் சில மடங்களில் கோஷிக்கப்படுகின்ற தத்தனை யென்பதுமே உண்மையானது. ப்ரபத்யே நிரவத்யாநாம் என்கிற ப்ராமாணிகமான தனியனென்றே எங்கும் பரிசு பெற்று வருவது. நவீந கல்பனைகளை நல்லோர் நம்புவரோ?

54. மணவாளமாமுனிகள் ஆதிவண்சடகோபமஹாதேசிகனிடம் ஸந்யாஸம் பெற்றாரென்று தென்கலையார் நூலிலேயே யிருப்பதாகவும், மாமுனிகளும் கேசவார்யபாத்ரத்தனியனை அநுஸந்தித்தாரென்றும் எழுதுவது ஸ்வகோஷ்டியில் சில பாமரர்களை ப்ரமிப்பிக்க உதவும். ஏலாப் பொய்களுரைப்பதனாலா ராமாநுஜபாத்ரத்தனியன் புராதனமாய்விடும்?

55. தேசிகன் ஸத்யாகாலம் என்கிற இடத்திற்கு எழுந்தருளினது கலாபனையின் காரணமாகவே யென்பது ஸர்வ நிர்விவாதம். அப்படியிருந்தும் "கந்தாடை லக்ஷ்மணாசார் அபசாரப்பட்டதனால் மனம் நொந்து ஸ்ரீரங்கத்தை விட்டு ஸத்யாகாலம் எழுந்தருளினார்" என்று (பக்கம் 3ல்) எழுதப்பட்டுள்ளது. இஃது ஒன்றுகொண்டே இவருடைய விபரீதக்ரஹணவைபவம் அனைவர்க்குமறியவெளிதாம். ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் அற்புதமான அபராதபரிஹாராதிகார மருளிச்செய்த தேசிகர் அபராதியான லக்ஷ்மணாசாருக்காக ஸ்ரீரங்கவாஸத்தையிழந்தாரென்கை மிகவுமழகியதே. *வைததனை இன்சொல்லாக் கொள்பவர்களில் தலைவரன்றோ தேசிகர்.

56. வாத்ஸ்ய அஹோபிலாசார்யர் என்பவர் கி. பி. 1550ல் இருந்தவரென்று ஒரு ப்ரமாணமும் காட்டாமல் எழுதப்படுகிறது. தகுந்த ப்ரமாணங்களைக் காட்டியன்றோ காலநிஷ்கர்ஷம் செய்ய வேண்டும். ராமாநுஜபாத்ரத்தனியன் வியாக்கியானம் அவர் செய்ததுதானு என்பதும் ப்ரமாணத்தைக்கொண்டு நிரூபிக்கப்பட வேணும். ஸ்ரீஜ்ஞாநஸூக்தமே வ்யவஸ்தாபகமாக ஆய்விடாதென்று அறிக.

57. (பக்கம் 5ல்) மிகவும் அஸம்பத்தமான ஒரு வாக்கியம் காண்கிறது. "தேசிகன் தனியனை சொல்லக்கூடாதென்பதல்லவா இவர்களாக்ஷேபம். ஆகவே பழையதெனக்காட்டி அடையும் பலன் ஒன்றுமில்லையென்பது வ்யக்தம்" என்றுள்ளது. தேசிகனிடத்தில் தென்கலையார்களுக்கு த்வேஷலேசமுமில்லையென்பதும், அவருடைய க்ரமமான தனியனிலும் வித்வேஷமில்லையென்பதும் பரக்க நிரூபிதம். பழையதெனக்காட்டி அடையும் பலன் ஒன்றுமில்லையென்கிற இவருடைய கருத்து யாதோ? புதியதைப் பழையதென்று காட்டிக்கொள்ளவேயன்றோ படாதபாடுகளும் பட்டுவருகிறார்கள். பலனொன்றுமில்லையென்கிறவர் நிஷ்பலமாகவா ஒரு தூஷணைச் சுவடி எழுத முன்வந்தார்! தூஷணையே ஸ்வயம்ப்ரயோஜனம்போலும்.

58. இப்படிப்பட்ட பல அஸம்பத்தவார்த்தைகளையே நிரப்பி ஒரு பத்திரிகை வெளியிட்டுவிட்டதனுல் என்ன பலன் கைகூடுமென்பதை அந்தோ! தேசிகபக்த ஸபை ஆராய்ந்திலது!. ஒரு தூஷண புஸ்தகத்தை வெளியிட்ட ராஜுதாஸர் என்கிற ஒரு வ்யக்திக்கு ஸ்ரீபட்டம் கொடுத்துக் கொண்டாடி மெச்சுகின்ற தேசிகபக்தஸபையின் விசால ஹ்ருதயம் வியக்கத்தக்கதே. அந்த தூஷண புஸ்தகம் உண்மையில் யார் எந்த ஸந்தர்ப்பத்தில் வெளியிட்டாரென்பதையும், உண்மை என்ன என்பதையும் இம்மதுரைமாநகரில் பலர் நன்கறிவார்கள். தெரிந்துகொள்ள விருப்பமுடையாரும் எளிதில் தெரிந்துகொள்ளக்கூடும். ப்ரக்ருத விஷயத்திற்குச் சிறிதும் ஸம்பந்தமற்றதான அவ்விஷயத்தை தேசிகபக்த ஸபை குறிப்பிட்டதானது எவ்வளவு யுக்தமென்பதை நாம் சொல்லவேணுமோ?

59. பாத்ரதத்வத்திலும் விஜயத்வஜத்திலும் கூறியுள்ள விஷயங்கள் யாவும் கண்ணழிவற்றவையே யாதலால், ஸ்ரீசைலேசத் தனியனும் அதைச்சேர்ந்த வாழித்திருநாமமுமே முற்பட்டவை யென்றும், அவற்றுக்குப் போட்டியாகவும் சண்டைக்காகவும் 200 வருஷங்களுக்கு உட்பட்ட காலத்தில் ராமாநுஜதயா பாத்ராதிகள் கல்பிக்கப்பட்டனவென்றும் கல்வெட்டான ஸித்தாந்தமாயிற்று.

60. உக்தவிஶிஷ்டவிஷயேஷு ஸ்வஸ்வயா நாமோஹம் நஹீதி நிஶ்சித்ய ।
ஸம்ப்ரதாயவேதிபிஸ்து ப்ராமாணிகைர்ஜ்ஞாதை: ப்ரஸீதந்தாம் ।

வித்வான் S. ஆழ்வார் அய்யங்கார்

இயற்றிய

**பாத்ரதத்வ பரமார்த்தம்**

முற்றிற்று.